ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்ய சந்த்ரிகை.

தொகுதி 16	ஜய, சித்திரை	பகுதி 4
Vol. 16	April, 1954.	No. 4

பக்கம்

ஆசிரியரின் வேண்டுகோள் ... 3

ஆயுர்வேதத்தைப்பற்றி ... 4

ஆயுர்வேத ஔஷத உற்பத்தியாளர்

மஹாநாடு—ஆரம்ப உரை ... 5

,, —தலைவர் உரை ... 11

வைத்யச் செய்திகள் ... 15

அப்யுதயகேந்த்ரம் (தனி) ... 1—6

மதுசர்க்கரை (மு. வே. வை. ரா.) (தனி) 53—56

திருச்சி

ஆயுர்வேதிக் யூனியன் லிமிடெட்

17, சின்னக்கடைத் தெருவு,

தெப்பக்குளம் P. O. திருச்சிராப்பள்ளி,

வைத்தியர்களுக்கு

எல்லா சாஸ்திரீய மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்கு சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

மண்டல சம்பந்தமான எல்லாவித காரியங்களுக்கும் தலைவருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மண்டல அங்கத்தினர்களுக்கு வருஷச் சந்தா ரூ. 5

(ஜனவரி முதல் டிஸம்பர் வரை (Calender year)

மண்டல அங்கத்தினர்களுக்கு மண்டலத்தின் பத்ரிகையான வைத்ய சந்த்ரிகை தனிக் கட்டணமின்றி அனுப்பபெறும்.

தலைவர். T. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ M. A., L. I. M.
23. சிங்காரிநாயக்கன் தெரு, மந்தை வெளி, மைலாப்பூர்
மதராஸ்.—4.

சந்தா அனுப்பவேண்டிய விலாஸம்—

ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ.
பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,
27, சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சினுப்பள்ளி.

விளம்பர விகித விஷயங்கள், அங்கத்தினர்களின் விலாஸம் மாறுதல், பிரதி இங்கிலீஷ் மாதம் 25-ந்தேதிக்குள் பத்திரிகை கிடைக்காவிடில் தெரிவிக்கப்படவேண்டியது, மற்றும் பத்திரிகை நிர்வாஹ ஸம்பந்தமான ஸகல விஷயங்களுக்கும் பொதுக் காரிய தர்சிக்கு எழுதிக் கொள்ள வேண்டும்.

பண்டிட் ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்யர்,
ஆசிரியர்—"வைத்ய சந்த்ரிகா" ஸ்ரீரங்கம்.

என்ற விலாஸத்திற்கு பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டிய ஸகல விஷயங்களையும் பற்றி எழுத வேண்டும்.

குறிப்பு: சந்திரிகையில் பிரசுரமாகும் இதரர்களுடைய கட்டுரைகளில் காணும் விஷயங்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல. பிரசுரத்திற்கு அனுப்ப வேண்டிய விஷயங்கள் தெளிவான எழுத்தில் காகிதத்தில் ஒரு பக்கத்தில் கொஞ்சம் இடம் (Margin) விட்டு எழுதப்பட வேண்டும். விஷயத்தைப் பிரசுரிக்க காலம், இடம், அளவு முதலியவைகளில் ஆசிரியருக்குப் பூர்ண ஸ்வாதந்த்ரியம் உண்டு. பிரசுரிக்கப் படாத கட்டுரைகளைத் திருப்பிப் பெற வேண்டுமாகில் தபால் கட்டணம் கட்டுரையாளரால் அனுப்பப்படவேண்டும்.

வைத்ய சந்திரிகை விளம்பர விகிதம்.

முழுப்பக்கம்	ஒரிதழிற்கு 12 ரூ.	வருஷத்திற்கு	100 ரூ.
அரைப்பக்கம்	,, 6 ,,	,,	60 ,,
கால்பக்கம்	,, 4 ,,	,,	40 ,,

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

அன்புமிக்க அன்பர்களே!

தங்கள் அன்பினால் மறுபடியும் தங்களிடையே ஸேவை புரிய இப்போது எமக்கு வாய்ப்பு வாய்த்திருக்கிறது. தங்களுடைய அன்புக்கு மிக நன்றி.

"லோகோ பிந்நருசி:" (உலகம் பல விதம்) என்னும் ஆன்றோர் முதுரையின்படி எல்லோருக்கும் ஒரு விஷயத்தில் ஒரே விதமான விருப்பு வெறுப்புகளிருக்கமுடியாது. எனவே, பத்திரிகையில் வெளிவரும் சில விஷயங்கள் சிலருக்கு த்ருப்தியையளிப்பதாக விருக்கலாம். மற்றவர்களுக்கு வேறு விதமாகவும் தோன்றலாம். இதைத் தவிர்க்க, பல தலையங்கங்களில் பலவித விஷயங்களை அளிக்கவேண்டுமென்பது எமது பாரிப்பு. இதைத் திறம்படச் செய்வதானால் இவ்விஷயத்தில் பல அன்பகளுடைய உதவி தேவையாகுமென்பது அனைவரும் அறிந்ததாகும்.

ஆகவே, விஷயம் எழுதக்கூடிய வித்வான்கள் விவாதாஸ்பதமின்றி விரும்பக்கூடிய விஷயங்களை நன்கு விளக்கக்கூடிய வியாஸங்களாக அடிக்கடி எழுதி உதவி புரிய வேண்டுமென்றும்; மற்ற நண்பர்கள் பத்ரிகை மேன்மேலும் வளர்ச்சிபெறும்படியாகவும், அரிய விஷயங்கள் வெளிவருவதற்கு அநுகூலமாகவும் தங்கள் தங்கள் நண்பர்களையும் அங்கத்தினர்களாகச் சேர்த்து வளம் மிகும்படி செய்து அதனால் உண்டாகும் நன்மைகளையடையவேண்டுமென்றும் கோருகிறோம்.

—ஆசிரியர்.

ஆயுர்வேதத்தைப்பற்றி

மே. த. கவர்னர் ஸ்ரீ ப்ரகாசா:

"......வைத்ய அறிவுச் செல்வத்தைப் பெருக்குவதில் ஆயுர் வேத சாஸ்த்ரத்துக்குப் பெருத்த பங்கு உண்டு என்பதே என் கருத்து. அந்த சாஸ்த்ரம் ஸரிவரக் காப்பாற்றப்படாமல் புறக் கணிக்கப்பட்டு வந்ததைக் கண்டு நான் வருந்துகிறேன். அக்கா லத்திய வைத்யர்கள் நோயை மட்டும் கவனிக்கவில்லை. நோயாளி யின் மனோநிலையையும் ஆராய்ந்தனர். தற்காலத்து மேநாட்டு வைத்யன் விரைவாக நோய்க்கு மருந்தை எழுதிக்கொடுத்து விடு கிறான். அக்காலத்திய நாட்டுவைத்யனோ நோயாளியின் அருகில் உட்கார்ந்து அவனுடைய கேள்விகளுக்குப் பொறுமையாக பதில் சொல்லி ஆறுதல் சொல்வான்.

மருந்துகள் தயாரிப்பை பரம ரஹஸ்யமாக வைத்துக் கொள் ளக்கூடாது. இதனால் அந்த ஞானம் குறிப்பிட்டவருடன் மறை ந்து விடுகிறது. கலைத்துறையில் இம்மாதிரி நமது செல்வங்கள் பலவற்றை இழந்து விட்டோம். அக்காலத்தில் மன்னர்களின் உதவிகளைக்கொண்டு பல உயரிய மருந்துகளைத் தயார்செய்து இலவசமாக அளித்தனர். இப்போது அம்மாதிரி உதவி செய்ய அரசர்கள் இல்லை.

இந்தியா சுதந்திரமடைந்து விட்டது. எதிர்கால இந்தியாவை உருவாக்க மேநாட்டு முறைகளைக் காப்பி அடிப்பது உசிதமல்ல. உலக அறிவு வளர்ச்சிக்கு இந்தியா தனிப்பட்ட முறையில் உதவ வேண்டும், நம் நாட்டுப் பழங்கால வைத்யமுறையிலுள்ள சிறந்த அம்சங்களை ஆராய்ந்து அதை அடிப்படையாக வைத்து வைத்ய முறையை வளர்க்கவேண்டும்......" (சென்னை மார்ச், 15)

ஸர். மகமத் ஊஸ்மான்:

"......இந்தியவைத்யப் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கும் சமயம் ஐரோப்பியர்களின் எதிர்ப்பு அதிக மிருந்தது. பனகால் ராஜா வின் அனுதாப மனப்பான்மை காரணமாகவே ஆரம்பிக்க முடிந் தது. அது இப்போது காலேஜாகத் திகழ்கிறது. சீக்ரத்தி லேயே இந்தியவைத்யத்துக்கு நாட்டில் புதியதொரு உன்னத ஸ்தானம் கிடைக்குமென்று நம்புகிறேன். இங்கு தயாரிக்கும் மருந்துகள் முதன்மையானதாக இருக்கும்போது இவற்றைத் தான் ஆதரிக்க வேண்டுமேதவிர விலை உயர்ந்த அன்னிய நாட்டு மருந்துகளை இறக்குமதி செய்யவேண்டியதவசியமில்லை......"

(சென்னை, மார்ச். 16)

ஸ்ரீ:

ஆயுர்வேத- ஔஷத உற்பத்தியாளர் மகாநாடு

திருச்சி, (21—2—54)

ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்திரிகளின் ஆரம்ப உரைச் சுருக்கம்.

சிகித்ஸைக்கு ஔஷதம் எப்படியமைக்கப்படவேண்டும் என்று மஹர்ஷிகள் ஸம்பூர்ணமாய் சொல்லியுள்ளார்கள். இந்தக்காலத்தில் மேலே கூறிய ஔஷத குணங்கள் மட்டும் போதுமானதாகாது. இப்பொழுது உலகில் ஔஷத வியாபாரம் மிகப்பெருகிவிட்டது. முற்காலத்தில் ஔஷதம் வியாபார முறையில் விற்பனைக்காக செய்யப் படுவதில்லை. ஆங்காங்கு சிகித்ஸைக்குத் தேவையானபடி ஔஷதங்களை முன்பு வைத்தியர்கள் தாங்களே தயாரித்துக்கொள்வார்கள். இந்நாளில் வியாபாரத்தை உத்தேசித்து மருந்துகள் ஏராளமாய் ஒரே ஸமயத்தில் சீக்கிரகாலத்தில் உற்பத்திசெய்யும்படியும், தேசத்திலிருந்து பல தேசாந்தரங்கள் ஸௌகர்யமாய் அனுப்பும்படியாகவும், ஆகவே வெகுநாட்கள் வைத்திருந்த போதிலும் பூஞ்சாளம் கிலேதம் முதலிய தோஷங்கள் வராமலும், வைத்தியன் நேரிட உபதேசிக்காமல், மருந்துடனிருக்கும் விவரக்கடிதங்களைப் பார்த்து, தாங்களாகவே உபயோகிக்கக் கூடியதாகவும், கட்டுப்பாடான உசித விலைக்கு எங்கும் மருந்து கிடைக்கும்படியாயிருப்பதுமான இதுபோன்ற வியாபாரத்திற்கு அவச்யமான குணங்களும் பொருந்தும் படியாகவே ஔஷதங்கள் தயாரிக்கப்படவேண்டியது அவச்யமாகி விட்டது.

ஔஷத நிர்மாணம் செய்பவர்கள் கால தேசங்களுடைய சூழ்நிலையின் மாறுதல்களையும், அதன் குணதோஷங்களையும் எப்பொழுதும் ஊன்றிக் கவனிக்கவேண்டிய தவச்யம். ஆதலால் சிறிது கவனிப்போம்.

நமது பாரதவர்ஷத்தில் ஔஷத கல்பன விஷயத்தில் முற்கால நிலையும் அதன் குணதோஷங்களுமாவன:—

வைத்தியர்கள் அவர்களுடைய சிகித்ஸைக்குத் தேவையான ஔஷதங்களை முற்றிலும், அவர்களே அவ்வப்பொழுது செய்வார்கள். கடைகளிலிருந்து அப்பட்டத் திரவ்யங்களை வாங்குவரேயன்றி செய்த மருந்துகளை வாங்கார். பிற வைத்தியர்களிட மிருந்தும் செய்த மருந்துகளை வாங்கும் வழக்கம் ஸாதாரணமாய் கிடையாது.

இம்முறையின் குணங்கள்:— வைத்தியனுக்கு த்ரவ்ய குணகர்ம விஞ்ஞானமும் கல்பன ஸாமர்த்தியமும் நாளுக்குநாள் வளரும். நோயாளியின் நோய்நிலைக்கேற்றவாறு ஔஷத யோகங்களில் அவச்யமான மாறுதல்களை ஸமயோசிதமாய் செய்து பிணி தீர்ப்பதில் அதிக முபகாரமளிக்கமுடியும். பொருள் செலவு பொதுவாய் குறையும். வைத்தியனுக்கு பொருள் வருமான விகிதம் அதிகமாகும்.

இம்முறையின் சில கெடுதல்கள்:— ஸாதாரண சில்லரை மருந்துகளை மட்டுமே வைத்தியர் எப்பொழுதும் முன்னதாகவே தயார் செய்து வைத்திருக்க முடியுமே தவிர, எல்லா முக்கிய பெரிய வியாதிகளுக்கும் அவச்யமான பெரிய ஔஷதங்களை முன்னதாக எப்பொழுதும் ஸித்தமாய் ஒரு வைத்தியர் கைவசம் வைத்திருக்க ஸாத்தியமில்லை. ஏனெனில் தாங்கமுடியாத பொருள் நஷ்டமேற்படுவது ஸகஜம். நோயாளி வந்த உடன் தகுந்த உயர்ந்த மருந்தைக் கொடுத்து உதவ முடியாது. தகுந்த மருந்து செய்தாகும் வரை நோயாளியைக் காக்க வைக்கவேண்டும். அல்லது, கைவசமிருக்கும் ஏதாவதொரு மருந்தைப் பிரயோகித்து ஏமாற்றவேண்டும். நோயாளியைப் பார்த்த உடன் வியாதியையும், மருந்தையும் பரீக்ஷித்து நிச்சயிக்கும் முன்பதாக, நோயாளியின் பணம் கொடுக்கும் சக்தியையும், மனப்பான்மையையும் நிச்சயிக்க வேண்டியதும் தன் கைவசம் அந்த ஸமயமிருக்கும் மருந்தைக்கொண்டு ஒரு வகையில் சிகித்ஸை செய்யவேண்டியதும் வைத்தியனுக்குத் தவிர்க்கமுடியாத கஷ்டகார்யம்.

இந்நாளில் பொருள் நஷ்டமேற்படாமல், சிறிது நஷ்டம் வரினும் தாங்கக்கூடிய பொருள் சக்தியுடன் கூடினவராக, எல்லாவித சிகித்ஸைக்கும் உசிதமான பெரிய மருந்து யோகங்களை எப்பொழுதும் தானே செய்து ஸித்தமாக வைத்துக்கொண்டு, வைத்தியம் செய்யும் சக்தி மிக மிகச் சில வைத்தியரிடமே காணமுடியும்.

சாஸ்திரீய ஞானவளர்ச்சிக்கு உபகாரமாயிருந்தாலும், வைத்தியர்கள் சிகித்ஸைக்குத் தாங்களே ஔஷத நிர்மாணம் செய்து வரும் பிராசீன ஸம்பிரதாயத்தைக் கிரமேண விட்டுவிடும்படியான நிர்ப்பந்தம் காலதேசத்தின் புதிய சூழ்நிலையினால் இப்போது பரவிக் கொண்டிருக்கிறது.

தேசிய வைத்தியர்கள் கூட தாங்கள் தனியாகச் செய்வதைப் பார்க்கிலும் வெளிநாட்டில் தயாரித்து இங்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படும் மருந்துகளை விலைக்கு வாங்கி உபயோகிப்பது லாபகரமாயிருப்பதை அநுபவித்து, வெளிநாட்டு மருந்துகளை உபயோகிப்பதும் நமது தேசிய வைத்தியர்கட்குப் பொருள் சிக்கன விஷயத்தில் அவசியமாகிவிட்டது. நானிங்கு ஆலோபாதிக் வைத்திய முறையில் பிரயோகிக்கப்படும் மருந்துகளைக் கருதவில்லை. நமது ஆயுர்வேத மருந்துகளையே கருதுகிறேன். ஜெர்மனியில் தயாரித்து வரும் Merck's மகரத்வஜம், Chemically சுத்தமான பாரதம், ரஸபுஷ்பம், ரஸகர்ப்பூரம், தாளகம், ஹிங்குளம், காஸீஸம், அயோரஜஸ் முதலிய நாமிங்கு செய்வதைப்பார்க்கிலும் வாங்குவது மலிவு. அநேக த்ரவ்யங்களின் ஆஸவங்கள், ப்ராசீனமுறைகளில் செய்வதைப்பார்க்கிலும், நவீனமுறையில் வெளிநாட்டில் செய்து வரும் மத்யாஸவங்கள் ஸுராஸவங்கள், (tinctures) ரஸக்ரியைகள் (extracts) மிக மலிவு. இவ்விதமே பலவர்த்திகள். (suppository), க்ஷாரங்கள், லேபங்கள் எல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்தவை மலிவாயிருக்கின்றன என்பது தங்களுக்கும் அநுபவமாயிருக்கக் கூடியதே.

இவ்விதம் காலம், தேசம், ஆட்சிகளுடைய மாறுதல் எல்லாம் சேர்ந்து வைத்தியர்களுடைய சிகித்ஸாகார்யத்தில் விசேஷ மாறுதலைவிளைவித்துள்ளது. என்ன மாறுதல்? சிகித்ஸை மருந்தில்லாமல் முடியாது. முற்காலத்தைப் பார்க்கிலும் மருந்துகளின் தேவை ஆயிரம் பங்கதிகமின்று. ஆகையால் மாறுதல் என்பது தற்கால சூழ்நிலையை அநுஸரித்து வெளிநாடுகளில் வெளி வைத்தியர்களுடைய அநுஷ்டானம்போல் இங்கும் ஔஷதங்களுடைய நிர்மாணத்தைத் தனிப்பட்டவர்கள் செய்து கொண்டு, பிரயோகங்களை வைத்தியர்கள் செய்வது மிகவும் யுக்தமாயும் காலோசிதமாயும் உபகாரமாயும் ஆகும்.

நமது ஆயுர்வேத சாஸ்திரத்தின் சிகித்ஸாபத்ததி, நமது பாரததேசத்தின் இயற்கை இரண்டையும் நன்ருய் ஆலோசித்தால் வைத்தியனுக்கு ஔஷதகல்பனு விஞ்ஞானம் இன்றியமையாதது. வீட்டுக்கொல்லையில் முளைத்திருக்கும் துளஸீ தும்பை விஷ்ணுக்ராந்தியை எடுத்து ஸ்வரஸம் கஷாயம் செய்து சாப்பிடு என்று சொல்லத் தெரியாமல் நமது தேசத்தில் ஒரு வைத்தியனிருக்கலாமென்று யாரே எண்ணுவர்?

ஆதலால், மருந்து செய்முறை பிரயோகம் இவ்விரண்டையும் தனித்தனிப் பண்டிதர்களிடம் பிரித்து வைப்பதிலும், பிரிக்காமல் சேர்த்துவைப்பதிலும் இன்று ஏற்படும் குறைகளும் தீமைகளும் என்ன செய்தால் நிவிருத்தியாகுமென்ற மஹத்தான பிரச்னை நம் முன்னிலையில் நிற்கின்றது. இதை நாம் ஆலோசித்துத் தீர்க்க வேண்டியதவசியம்.

இவ்விஷயத்தில் எனக்குத் தோன்றும் சில யோஜனைகளைக் கூறுகிறேன். முக்கிய விஷயமானதால் தங்களை யெல்லோரையும் இதைப் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறேன்.

அமெரிகா, இங்கிலாந்து முதலிய வெளிநாடுகளில் உலகம் பூராவுக்கும் கொடுக்கும் உத்தேசத்துடன் மிகவும் பெரிய பெரிய மருந்து உற்பத்தி தொழிற்சாலைகள் இருப்பதைப்பார்த்து,' பூமண்டலம் முற்றிலும் நாம் மருந்து அனுப்பவேண்டாமா?' என்ற எண்ணத்துடன் மிகவும் பெரிய மருந்து உற்பத்தி தொழிற்சாலைகளை நமது பாரததேசத்தில் ஸ்தாபிக்க நினைப்பது மிகத் தவருன செய்கையாகும். மிகப்பெரிய தொழிற்சாலைகளினுல் உலகத்திற்குக் கஷ்டம் அதிகம். ஸுகம் குறைவு. நமது நாட்டில் ஆங்காங்கு மக்கட்குத் தேவையைப் பூர்த்திசெய்யுமாறு சிறிய சிறிய ஔஷத நிர்மாண சாலைகள் நிறுவப் படுவதே உத்தம முறை. ஸாதாரணமாய் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் குறைந்த கடைசிபக்ஷம் ஒரு ஔஷத நிர்மாணசாலையாகிலும் இருக்கவேண்டும். அந்த ஜில்லாவில் வசிப்பவருக்குத் தேவையான ஔஷதங்கள் முற்றிலும் அதிலிருக்கும் நிர்மாண சாலையிலேயே தயாரிக்கும்படியாக இருக்க வேண்டும்.

இந்த நிர்மாணசாலைகள் கூட்டுறவுச் சங்கத்தின் (Co operative Sociey) சட்டதிட்டப்படி ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்தந்த

ஜில்லாவில் வைத்தியத் தொழில் புரியும் பதிவு செய்துகொண்ட தேசிய வைத்தியர்கள் மட்டுமே இதில் அங்கத்தினராக விருக்கும் உரிமை பெறவேண்டும். அந்த ஜில்லாவில் சுதந்திரமாய் தொழில் புரியும் வைத்தியர்கள், ஸ்தலஸ்தாபனங்களாலும் சர்க்காராலும் தனி தார்மிகப் பிரபுக்களாலும் நடத்தப்படும் தர்ம வைத்திய சாலைகள் ஆரோக்கியசாலைகள் எல்லாம் இந்தக் கூட்டுறவுச் சங்கப் படி நடக்கும் ஔஷத நிர்மாணசாலைகளிலிருந்து பூராவான மருந்து களைப் பெற்றுக் கொள்ளும்படியாக இருக்கவேண்டும். ஜில்லா வின் தலைநகருக் கருகாமையில் போக்குவரத்து சாதன மமைந் துள்ள விஸ்தாரமான பிரதேசத்தில் ஔஷதநிர்மாணசாலை விநி யோக வசதியுடன் கட்டப்படவேண்டும். தேவையானபடி நகரி லும், ஜில்லா பூராவும் பல இடங்களில் ஔஷத விநியோக சாலை களும் விற்பனைக் கடைகளும் வைக்கப்படவேண்டும். இந்த நிர் மாணசாலை மருந்துகள் அதன் அங்கத்தினரான வைத்தியர்களுக் கும், அவர்களுடைய உபதேசக் கடிதம் வாங்கிக் கொண்டவர்களுக் கும் மட்டுமே அதிகலாபமின்றி அடக்க விலைக்கு விற்கப்படவேண் டும். அங்கத்தினரல்லாத பொது ஜனங்களுக்கு நேராக மருந்து கொடுக்காமலிருப்பது நல்லது.

பிரதி ஜில்லாவில் ஔஷத நிர்மாண ஸ்தாபனம், சில காரியங் களில் சுதந்திரமாயிருந்த போதிலும், இவையெல்லாம் ஒரு கேந்திர மஹாஸ்தாபனத்தின் உபதேசப்படியே கட்டுப்பட்டு விதிப்படி நடக்கவேண்டும். ஔஷதங்கள், கல்பனா பிரகாரங்கள், மான பரிபாஷைகள், பெயர்கள், வியவகாரங்கள், விநியோகமுறைகள் எல்லாவற்றிலும் எல்லா நிர்மாண சாலைகளிலும் ஒரே நீதி ரீதி இருக்கவேண்டும். இவைகளின் கடைசீ மேலான நிர்வாஹ நியமன அதிகாரம் தேர்தல் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரை உடைய தேசிய வைத்திய போர்டுக்கு இருக்க வேண்டும். ஸர்க்கார் ஸஹாயம் எல்லாவிதத்திலும் பூர்த்தியாக இருக்கவேண்டும். மூலிகைகள் ஏராளமாய் உற்பத்தியாகும்படி யான காடுகள் மலைகள் நதிப்படுக்கைகளைப் பண் படுத்திக் கொடு த்து உதவவேண்டும்.

பிரதி நிர்மாணசாலையிலும் ஔஷத கல்பத்தில் மட்டும் நிபு ணர்கள் பலரிருந்தபோதிலும் ஆயுர்வேதம் முற்றிலும் பூர்ண

யோக்யதை வாய்ந்த குறைந்த பக்ஷம் இரண்டு வைத்தியர்கள் முழுநேரம் வேலை செய்பவர்களாக ஆராய்ச்சிக்காக அவச்யமிருக்க வேண்டும். அந்தந்த ஜில்லாவில் இருக்கும் எல்லா வைத்தியர் களுக்கும் இந்த ஔஷத நிர்மாணசாலையிலிருந்து ஔஷதங்கள் பெறும் ஸௌகர்யத்துடன் த்ரவ்ய குணகர்மவிஞ்ஞானம், ஔஷத கல்பனம் இரண்டு விஷயத்திலும் ஞானபிவிருத்திசெய்து கொள்ள ஸௌகர்யமான தொடர்பு எப்பொழுதுமிருக்க முடியும். இப்படியே இந்த ஔஷத கல்பநாவிஞ்ஞானத்தில் ஈடுபட்டிருக்கும் வைத்தியர்களுக்கு த்ரவ்ய குணகர்மாக்களை நோயாளிகளிடையே பிரயோகம் மூலம் நிச்சயமாய் அறிவதற்கு அவச்யமான பிரயோக பரீக்ஷாசாலைகளாக அங்கு சுற்றிலுமிருக்கும் தர்ம வைத்திய சாலைகள் உபகார மளிக்கும்படி ஏற்பாடு செய்யப்படவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் ஔஷத கல்பன சாலைகளும் ஆரோக்கிய சாலைகளும் சேர்ந்து ஒற்றுமையுடன் உழைக்கவேண்டிய முறைப்படி செய்தால், ஆயுர்வேதசாஸ்திரத் தில் செய்யவேண்டிய ஆராய்ச்சிகளில் முக்கியமான அம்சங்கள் சில இவ்வித அமைப்பில் விசேஷ பணச்செலவின்றி ஸுலப மாய் ஸாத்தியமாகும் என்ற விசேஷமான பிரயோஜனமும் கிடைக்கும். மருந்து செய்முறை பிரயோகம் இரண்டையும் பிரிப்ப திலும், சேர்ப்பதிலும் ஏற்படக்கூடியதாக மேலே வருணிக்கப் பட்ட குறைகளும் தீமைகளும் நிச்சயமாய் நிவிருத்தியாகி விடும். நமது நாட்டின் நிலைமையை யோஜித்துப்பார்த்தால் கூட்டுறவுச் சங்க விதிப்படி பிரதி ஜில்லாவிலும் ஔஷத நிர்மாண சாலைகள் ஏற்படுத்துவதே உத்தமம். இது ஸுலபம் என்று என் அபிப்பி ராயம்.

ஒரு ஔஷத யோக புஸ்தகம் பரிபாஷாசிரமமின்றி புதிய முறையில் உடனே எழுதிப்பிரகாசமாகவேண்டும். அந்தந்த தேசத் திலிருக்கும் மானபரிபாஷைகளையும் லோகவியவகார ஞானத்திற் காகச் சேர்த்துக்கொண்டாலும் ஆயுர்வேதலோகத்திற்கு உகந்த தனி மான பரிபாஷை நிச்சயித்து அதன்படி எழுதவேண்டும். மானபாண்டங்களும் (Weights & measures) தராசுகளும் அந்தப் புதிய முறைப்படி தயாரித்துப் பழக்கத்தில் கொண்டுவந்து விடவேண்டும். முதலில் வைத்தியர்கள் கட்டுப்பாடாக இருந்தால் ஔஷத வியவகாரத்தைப் பற்றிய வரையில் நாளடைவில் பொது

ஜனங்களும் இந்த மான பரிபாஷையின் படியே பேசத் தொடங்கி விடுவார்கள். இந்தப் புதிய முறை யோக புஸ்தகத்தில் ஆயுர்வேதம் யுனானி ஸித்தம் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லாம் ஒரே ஆயுர்வேதமாகவே இருக்கவேண்டும். தக்ஷிணபாரதத்தில் ஆந்த்ர கேரள கர்நாடகத் தமிழிலிருக்கும் திருஷ்டபலமான யோகங்களை மட்டும் ஒருங்கு சேர்த்து ஒரு யோக புஸ்தகம் வெளியிடுவது முதற்கார்யம்.

ஆயுர்வேத ஔஷத உற்பத்தியாளர் மகாநாடு.

தலைவர் ஸ்ரீ. S. வாரியர் பேருரை. (சுருக்கம்)

நான் இந்த மகாநாட்டின் தலைமையை ஏற்க முன் வந்ததற்கு ஒரு முக்கியகாரணம் உண்டு. "வைத்யன் வைத்யனுடன் கூடிப்பேச வேண்டும். ஒரே வித சாஸ்திரத்தில் பயிற்சி பெற்றவனுடன்கூடி சர்ச்சை செய்யும் போது அறிவு வளர்கின்றது; அதனால் சந்தோஷமும் மிகுந்த சாமர்த்தியமும் நன்கு விவரித்துக் கூறும் சக்தியும் உண்டாகின்றது. சந்தேகங்கள் தெளிகின்றன. இதுவரை கேட்காத வேறு சில விஷயங்களும் அறியப்படுகின்றன." என்கிறார் சரகர். அவ்வாக்கின்படி இந்த வித்வான்களின் கூட்டதிலிருந்து நான் ஏதாவது பெறலாமோ என்றே எண்ணி வந்தேன்.

ஆயுர்வேத வைத்யர்களில் பலர் மருந்து உற்பத்தியாளர்களாகவே இருக்கிறார்கள். மற்ற வைத்ய முறைகளில் மருந்து உற்பத்திக்கும் சிகித்ஸைக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் சிகித்ஸைக்காகக் குறிப்பிடும் எல்லா மருந்துகளையும் இன்று கடைகளில் பெற்றுவிடலாம். ஆனால் ஆயுர்வேத வைத்யர்கள் விஷயத்தில் மருந்துகள் தயாரிப்பு முறையைப்பற்றி வியாதிஸ்தனுக்கோ அவனது உறவினருக்கோ போதிக்குமளவு பொறுப்பு இருக்கின்றது. ஆனால் கால க்ரமத்தில் இங்கும் பல மருந்து உற்பத்திசாலைகள் நாடெங்கும் ஏற்பட்டு வளர்ந்து வருகின்றன.

மருந்து உற்பத்திசாலைகள் வளர வளர, அவை சம்பந்தமான பல பிரச்னைகளும் கிளம்பிக் கொண்டே இருக்கின்றன. ஸர்வ

ஸம்மதமான நியதமான ஒரு மருந்து செய்முறையும் சரக்குகள் இது இன்னது என்ற நிச்சயமும் அவைகளின் தரநிர்ணயமும், இன்னமும் ஏற்படாததால் பல உற்பத்திசாலேகளில் உற்பத்தியாகும் மருந்துகளும் தரத்திலும் குணத்திலும் விலேயிலும் வேறுபடுகின்றன. அதனல் மருந்தை வாங்கும் நோயாளிக்கு எது நல்லதென்பதில் ப்ரமம் ஏற்படுகின்றது.

இந்தியாவில் ஓரிடத்தில் ஒரு பெயரால் உபயோகப்படும் திரவியத்திற்குப் பதில் வேறிடத்தில் வேறு பொருள் உபயோகப் படுகின்றது. மற்றும் வரவர மருந்து சரக்குகளின் உற்பத்தியும் குறைந்து வருகின்றது. உதாஹரணமாக பிருஹத் பஞ்சமூலம் எமது தேசத்தில் கிடைப்பது குறைவாகி வருகின்றது. அத்துடன் பச்சை மூலிகைகளான கருசலாங்கண்ணி கற்ருழை முதலியவை கேரளத்தில் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. இதற்குநாங்கள் கோயமுத்தூர் ஜில்லாவையே எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. மற்றும் கேரளத்தில் கிடைக்கும் கருசலாங்கண்ணியின் சாறு மெல்லிய திரவமாகவும், ஈரோடு பக்கங்களில் கிடைப்பதன் சாறு தடித்ததாகவும் காணப் படுகின்றது.

ஆராய்ச்சியினலேயே இவைகளில் எது நல்லதென்று கண்டு பிடிக்கவேண்டும். மேலும் உற்பத்திக்குறைவைத் தடுக்க, அரசாங்க உதவியையே நம்பி யிராமல், ஆங்காங்குள்ளவர்களே பிரயத்னப்பட்டு ஆங்காங்குள்ள தேசசீதோஷ்ண ஸ்திதிக்கேற்றவாறு வளரக்கூடிய மருந்து சரக்குகளே அதிக அளவில் உற்பத்தி செய்வது தான் நல்லது.

மற்றும் தற்சமயம் சில மருந்து சரக்குகளின் விலேயும் ஏறிக் கொண்டே வருகின்றது. இதன் பலனுக சில மருந்துகளின் விலேயும் ஏறுகின்றது. அதனல் ஏழைகளுக்கும் மத்யதரவகுப்பினருக்கும் உதவ சிரமமேற்படுகிறது.

மேலும் போலிச்சரக்குகளேத் தவிர்க்கவும் மருந்துசரக்குகளில் தரத்தை நிர்ணயிக்கவும் ஒரு நியதமான பரீக்ஷை முறை கண்டு பிடிக்கப்படவேண்டும். Indian Pharmaceutical Codes போன்ற பிரசுரங்கள் இவ்விஷயத்தில் ஓரளவு பயன்படுகின்றன. மஞ்சிட்டி. செவதை முதலியவைகளில் பற்பல பேதங்கள் காணப்படுகின்

றன. தேனில் சில விடங்களிலிருந்து பெறப்படுவதில் சர்க்கரை போன்ற மாறுதல்காணப்படுகின்றது. மலையாளத்திலிருந்து கிடைக்கும் தேனில் இத்தன்மை காணப்படுவதரிது. சர்க்கரை போன்ற நிலை இயற்கையிலேயே உள்ள தேனின் குணமா அல்லது சர்க்கரை முதலியவைகளை செயற்கையில் சேர்த்ததால் ஏற்பட்டதா என்று நிர்ணயிப்பது மிக சிரமமே. அரேணுகமும் வால்மிளகும் ஒன்றெனச் சிலர், வேறு எனச் சிலர்; கம்பில்லகத்தில் எவ்வளவோ அபிப்ராய மாறுதல்கள். இவ்விதம் அபிப்பிராய மாறுதல்கட்குட்பட்ட சரக்குகள் பல. அதனால் வெவ்வேறு சரக்குகளால் தயாரிக்கப்பட்ட மருந்து ஒரே பெயரைப் பெற்றிருப்பினும் குணத்தில் மாறுபடுவது இயற்கையே. அதனால் இவ்விஷயத்தில் தராதர நிர்ணயமும், சரக்கின் ஸ்வரூபநிர்ணயமும் மிக அவசியம் செய்ய வேண்டியது. அத்துடன் நெய், எண்ணெய் போன்றவை கலப்பில்லாமல் உயர்ந்த ரகத்தில் கிடைப்பது மிகவும் அரிதாகிக் கொண்டிருக்கின்றது. எனது அனுபவத்தில் தங்க பஸ்மத்திற்கென வாங்கப்பட்ட தங்கத்தகடுகள் சரிவர பஸ்மமாகாதது கண்டு, பிறகு பரிசீலனை செய்தபின் தாம்ரக்கலப்பு தான் அதற்குக் காரணம் எனக் கண்டு அதை நீக்கிய பின் பஸ்மம் செய்ய நாங்கள் பட்டபாடு இன்று என் நினைவிற்கு வருகின்றது. மிளகு நல்லவிலையில் கண்டி நான்காயிரரூபாய் விலை வரை ஏறி, பிறகு கலப்படமென்ற காரணத்தால் வெளிதேசச் செலாவணி குறைந்ததும் தற்சமயம் ரூ. 1500-க்குக் கிடைக்கின்றது. இவ்விதக் கலப்பட மிளகு மருந்துகளில் சேர்க்கப்பட்டால் மருந்து எவ்விதம் நன்றாக குணசாலியாக அமையும்?

அதனால் மருந்துச் சரக்கு வியாபாரத்திலும் மருந்து செய்முறையிலும் நாணயம் மிகுந்து நல்ல சரக்குகள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதைத்திறனுடன் நடத்த கூட்டுறவு முறையில் மருந்துச் சரக்குகள் உற்பத்தி விநியோக சங்கங்கள் மருந்து உற்பத்தி சாலைகளின் கூட்டுறவால் நல்ல நிபுணர்களின் மேற்பார்வையில் நடத்தப்படவேண்டும்.

ஆக எனது அபிப்பிராயத்தில் ஆயுர்வேத மருந்து உற்பத்தி விஷயத்தில் நல்ல அபிவிருத்தி காணக் கீழ்க்கண்ட விஷயங்களில் அதிக சிரத்தை காட்டப்படவேண்டும்.

(1) அரசாங்கம் ஆயுர்வேத விஷயத்தில் காட்டும் அசிரத்தையை மாற்றுதல். (2) ஸர்வஸம்மதமான நியதமான மருந்து செய்முறைக்குறிப்பு தயாரித்தல். (3) மருந்து செய்முறை விஷயத்தில் விவரமான பயிற்சி அளிக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தல் (4) தென்னிந்தியாவில் ஓர் ஆராய்ச்சி ஸ்தாபனத்தை ஏற்படுத்தல். (5) கிடைக்க அரிதாயிருக்கும் சில மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்தல்.

இவ்விஷயங்களில் நாம் சிரத்தையுடன் சரியான வழி கண்டு பிடிக்க முயலுவதே நமது முக்கிய நோக்கம்.

அடுத்த இதழில்:

கேரளதேசத்தில் பாலசிகித்ஸையை விவரிக்கும் மிக ப்ரஸித்தமான "ஆரோக்ய கல்பத்ருமம்" என்னும் புத்தகத்தின் மொழிபெயர்ப்பு வெளியாகும். அவச்யமான இடங்களில் பாலதந்த்ரம், காச்யபஸம்ஹிதை, பாலவாகடம் முதலிய க்ரந்தங்களிலிருந்தும் விஷயங்களை யெடுத்து குறிப்புரையாக விவரிக்கப் பெறும். இது எல்லோருக்கும் மிக உபயோகமாக விருக்கும்.

பாரத ஆயுர்வேதசாலா,

27. சின்னக்கடைத்தெரு,
தெப்பக்குளம், திருச்சி.

இவ்விடத்தில் எல்லாவித சாஸ்த்ரீயமான மருந்துகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள் !

வைத்யச் செய்திகள்

திருச்சி மகாநாடும், ஆயுர்வேதஸபை ஆண்டுவிழாவும்:

நமது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் 19-வது மகாநாடு 1954-ஹு பிப்ரவரி 20, 21 தேதிகளில் திருச்சி நகரில் ஸ்ரீசின்னையா பிள்ளை கல்யாணமண்டபத்தில், அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை வைத்திய ஸ்ரீ. த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, எம். ஏ., எல். ஐ. எம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக் குழுவினரான திருச்சி ஆயுர்வேத சபையார், தமது இருபதாவது ஆண்டுவிழாவையும் 20–2–54 காலை கொண்டாடினர். ஸ்ரீதன்வந்தரி பிரார்த்தனைக்குப்பின் ஆயுர்வேத ஸபையின் ஆண்டுவிழாவிற்கு வந்திருந்த பிரதிநிதி அங்கத்தினர்களை ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ (திருச்சி) வரவேற்றுப் பேசினர். விழாவை ஸ்ரீரங்கம் ராயபாளயம் எஸ்டேட் அதிபரும் ஸ்ரீலக்ஷ்மீ பிரஸன்னவெங்கடேசுவர தர்ம ஆயுர்வேத வைத்யசாலை தர்மஸ்தாபன நிர்வாஹியுமான ஸ்ரீ. எம். வி. கிருஷ்ணமூர்த்திராவ், பி. ஏ. பி. எல். அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள். ஆயுர்வேதம் அரசாங்கத்தாரின் பூர்ண ஆதரவு பெருதிருக்கையிலேயே ஜனங்களின் ஆரோக்கியப்பாதுகாப்பில் இணையற்ற சேவை செய்துவருவதைப் பாராட்டி தன்னம்பிக்கை உற்சாகம் ஊக்கம் இவைகளுடன் ஆயுர்வேதத்தின் எதிர்காலத்தை திறம்பட சிறப்பாக வகுக்க முன் வருமாறு வைத்யர்களை வேண்டிக்கொண்டு, தான் ஆயுர்வேத வைத்யசாலை விஷயமாக செய்ய விரும்பிய பல திட்டங்களைப்பற்றி விவரித்தார்.

தலைமைவகித்த பங்களூர் ஜயசாமராஜேந்திர இன்ஸ்டிட்யூட் ஆப் இந்தியன் மெடிஸின் பிரதான வைத்ய நிர்வாஹியான ஸ்ரீ. ஒய். பார்த்தநாராயண பண்டிட் அவர்கள் ஆயுர்வேத அரசியலில் புகுந்து சர்க்காருடன் இது விஷயமாக வாதாடி செய்ய வேண்டிய பல திட்டங்களைப் பற்றிக் கூறினர்கள்.

பிறகு வைத்ய விசாரத ஸ்ரீ. எஸ். பஞ்சநதசர்மா அவர்கள் பஞ்சகர்ம சிகிச்ஸை என்ற விஷயம் பற்றி உபன்யசித்தார். இது பற்றிய சர்ச்சையை திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. வா. பா. நடராஜ சாஸ்திரீ அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். சர்ச்சையில் வைத்ய வாசஸ்பதி ஸ்ரீ. ராமசர்மா அவர்கள், குளித்தலை

விசுவநாதசர்மா, பண்டித ஸ்ரீ. நாராயண அய்யங்கார், ஸ்ரீ. எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, கோட்டக்கல் ஸ்ரீ. சங்கரவாரியர் மற்றும் பலர்களும் கலந்து கொண்டனர்.

ஸபைக்காரியதர்சி ஸ்ரீ. ஈசுவரஅய்யர், எல். ஐ. எம். அவர்கள் வருஷாந்தர அறிக்கையை சமர்ப்பித்தார். பின்னர் தன்யவாதத்துடன் விழா இனிது முடிந்தது.

20—2—54 அன்று மாலை தமிழ்நாடு ஆயுர்வேத மகாநாடு ஆரம்பமாகியது. வரவேற்புக்கமிட்டித் தலைவர் ஸ்ரீ. வி. ஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றுச் *சொற்பொழிவாற்றினார். சென்னை தினமணி உதவி ஆசிரியர் ஸ்ரீ. வெங்கடாசார்யர் அவர்கள் * மகாநாட்டை ஆரம்பித்துவைத்தார். பிறகு தலைவர் ஸ்ரீ. த. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ அவர்கள் தனது தலைமையுரையை* நிகழ்த்தினார். பிறகு சம்மேளனத்திற்கு வந்த வாழ்த்துச்செய்திகள் படிக்கப்பட்டன. செய்தி அனுப்பியவர்களில் சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா, டாக்டர் லக்ஷ்மீபதி, டாக்டர் ஸ்ரீனிவாஸமூர்த்தி, ஸ்ரீ. கே. பாலஸுப்ரமண்ய அய்யர், ஸ்ரீ. வி. எஸ். வெங்கடசுப்ரமண்ய சாஸ்திரீ, ஸ்ரீ. எஸ். விசுவநாத சர்மா, ஸ்ரீ ஹரதத்த சாஸ்திரீ (அகிலபாரத ஆயுர்வேத வித்யா பீடத்தலைவர்) ஸ்ரீ வாமனராவ் தீநநாத வைத்ய (அகிலபாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனப் பொதுக்காரியதர்சி) இவர்கள் முக்கியமானவர்கள்.

இடைவேளைக்குப் பிறகு திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. வா. பா. நடராஜ சாஸ்திரீ அவர்கள் ஸமூகவைத்யமும் ஆயுர்வேதமும் என்பது பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார்கள். (இதன் விபரம் சந்திரிகையில் பின்பு வெளி வரும்.)

21—2—54 அன்று காலை நடந்த ஆயுர்வேத உற்பத்தியாளர் மகாநாட்டிற்கு கோட்டக்கல் ஆர்யவைத்யசாலைத்தலைமை வைத்தியர் ஸ்ரீமான் சங்கரவாரியர் அவர்கள் தலைமைவகித்தார். அம்மகாநாட்டை ஸ்ரீ. வா. பா. நடராஜ சாஸ்திரீ அவர்கள் ஆரம்பித்து

---

* இவர்கள் செய்த பேருரைகள் மார்ச்சு மாதத்தில் வெளியான சந்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

வைத்தார். (இவ்விருவரின் சொற்பொழிவுச் சுருக்கம் இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.) பிறகு நடந்த ஆயுர்வேத பாடதிட்டத்தைப்பற்றிய சர்ச்சையில் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டனர். பிற்பகல் இடைவேளைக்குப்பின் பொதுக்காரியதர்சி ஸ்ரீ. எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ அவர்கள் தமது ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். புதிய நிர்வாஹசமிதித் தேர்தலும் தீர்மானங்கள் நிறைவேறுதலும் முடிந்தபின்னர் தன்யவாதத்துடன் மகாநாடு இனிது முடிவுபெற்றது.

பிரதிநிதிகளின் போஜனவசதிக்குப் பூர்ணமாய் நன்கொடை அளித்து உதவிய ஸ்ரீ. M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ் (ராயபாளயம் எஸ்டேட் அதிபர்) அவர்களின் தாராளமனப்பான்மையும் ஆயுர்வேதத்தில் சிரத்தையும் மிகப்பாராட்டத்தக்கது.

த. ஆ. ம. நிர்வாஹஸமிதிக் கூட்டம்;

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலத்தின் விசேஷ அவஸர நிர்வாஹஸமிதிக் கூட்டம் கோட்டக்கல் ஆர்யவைத்யசாலையில் 7–3–54 ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு மஹாமண்டலத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

மஹாஸம்மேளனத்தில் பொதுக்காரியதர்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஸ்ரீ. A. ராகவ ராவ் அவர்கள் தன்னால் அப்பொறுப்பை வகிக்க இயலாதிருப்பதைத் தலைவருக்கு தெரிவித்துக்கொண்டதன் பேரில் அன்னாருக்குப் பதிலாக புதிய பொதுக்காரியதர்சியை தேர்ந்தெடுக்கவும் வைத்யசந்திரிகை நிர்வாஹத்தை திருச்சிக்கு மாற்றுவது பற்றி யோசிக்கவும் இக்கூட்டம் கூடியது. கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

1 ஸ்ரீ. A. ராகவ ராவ் அவர்கள் தமது சொந்த அசௌகர்யங்களால் பொதுக்காரியதர்சி பதவியை ராஜீனமா செய்ததை வருத்தத்துடன் ஏற்றுக்கொண்டு, ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ அவர்களையே பொதுக்காரியதர்சியாக தொடர்ந்திருக்கும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அன்னார் அக்கோரிக்கையைக் கூட்டத்திலேயே ஏற்றுக் கொண்டதற்கு நன்றி செலுத்தப்பட்டது.

2. வைத்யசந்திரிகை பிரசுரம் அச்சிடுதல் இவைகள் விஷயத்தில் ஆசிரியர், உதவி ஆசிரியர் பிரசுரதாரர் இவர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்து அச்சிடுதலையும் பிரசுரத்தையும் ஸ்ரீரங்கத்திற்கும் திருச்சிக்கும் கொணரத் தீர்மானிக்கப்பட்டது. இது விஷயமான காரியங்களில் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்ய பொதுக்காரியதர்சிக்கு பூர்ண அதிகாரம் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்.

நிர்வாஹஸமிதித் தேர்தல் விபரம்.

சென்ற 20, 21-2-54 தேதிகளில் திருச்சியில் நடந்த 19-வது தமிழ்நாடு ஆயுர்வேத மஹாஸம்மேளனத்திலும், பிறகு கோட்டக்கல்லில் 7-4-54 அன்று நடந்த நிர்வாஹஸமிதிக் கூட்டத்திலும், கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் நிர்வாஹஸமிதி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

[மஹாஸம்மேளனத்தில் பொதுக்காரியதர்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் A. ராகவராவ் அவர்கள் தனது இயலாமையைக் குறித்து பொதுக்காரியதர்சி பதவியிலிருக்க சம்மதிக்காததாலும் வேறு ஒருவரும் அப்பதவியை ஏற்க முன்வராததாலும் சென்ற இரண்டு ஆண்டுகளாக பொதுக்காரியதர்சியாக விருந்த ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்களே மறுபடியும் பொதுக்காரியதர்சியாகவிருக்கக் கோரப்பட்டார்.]

நிர்வாஹஸமிதி :

1. ஸ்ரீ. T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, M. A., L. I. M. சென்னை } தலைவர்
2. வைத்யவாசஸ்பதி பண்டித ஸ்ரீ. P. S. ராமசர்மா, கரூர் } உபதலைவர்கள்.
3. ஆயுர்வேதஸேவாப்ரவீண Dr. V. ஸுப்பிரமண்யம், ஸ்ரீரங்கம் } உபதலைவர்கள்.
4. பண்டித. S. M. ஸுந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம், வைத்யசந்திரிகை ஆசிரியர்.
5. வைத்ய விசாரத S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி-பொதுக்காரியதர்சி. வைத்யசந்திரிகை உபஆசிரியர், பிரசுரிப்பவர்

6. K. ராகவன் L. I. M. சென்னை
7. P. V. ஹரிஹரன், ஆர்யவைத்ய, கரூர்
} உபகார்யதர்சிகள்.

8. V. R. ஸுப்பிரமண்ய அய்யர், திருச்சி, பொக்கிஷதார்.

9. பண்டித ஸ்ரீ. S. நாராயண அய்யங்கார், கரூர்

10. ஆயுர்வேதாசார்ய வைத்யவிசாரத ஸ்ரீ. V. B. நடராஜசாஸ்திரிகள், திருச்சி

அங்கத்தினர்கள் :—

11. ஸ்ரீ. A. ரர்கவராவ். A. L. I. M. திருச்சி
12. S. R. வரதராஜலு நாயுடு, ஸ்ரீரங்கம்
13. வைத்யவிசாரத R. V. ராமஅய்யர், கரூர்
14. வைத்யவிசாரத P. விசுவநாத அய்யர், புதுக்கோட்டை
15. ஸ்ரீ K. வைத்யநாத சாஸ்திரிகள், புதுக்கோட்டை

16. வைத்யவிசாரத
,, ஸ்ரீ. V. S. வெங்கடஸுப்பிரமண்ய சாஸ்திரி,
17. ,, ஸ்ரீ. C. M. சிவஸுப்பிரமண்ய அய்யர்,
18. ,, ஸ்ரீ. B. வைத்யநாத அய்யர்,
19. ,, ஸ்ரீ. M. V. ஸுப்பிரமண்ய அய்யர்,
} சென்னை

20. ஸ்ரீ. T. M. முனுஸாமி நாயுடு, திருப்பத்தூர்.
21. வைத்யவிசாரத ஸ்ரீ. P. S. ஸ்ரீனிவாஸஅய்யர், சிதம்பரம்
22. ஸ்ரீ. A. P. வெங்கடேசன், திண்டிவனம்
23. ஸ்ரீ. M. சங்கரவைத்யர், தஞ்சாவூர்.
24. ,, M. V. லக்ஷ்மண சாஸ்திரி, திருவாரூர்
25. வைத்யவிசாரத V. R. லக்ஷ்மீகாந்தசர்மா, கும்பகோணம்
26. ஸ்ரீ G. தங்கவேலு, இடகிளைமூர்
27. வைத்யவாசஸ்பதி ஸ்ரீ. T. S. ஸுப்பிரமண்ய அய்யர், மதுரை
28. ஆர்யவைத்ய ஸ்ரீ. N. ராமவாரியர், மதுரை.
29. வைத்யவிசாரத ஸ்ரீ. P. S. அநந்தராமசர்மா, பொள்ளாச்சி,
30. ஸ்ரீ. K. R. ஸுப்பராவ், ஈரோடு
31. வைத்யவிசாரத ஸ்ரீ. D. ஸ்ரீனிவாஸன், ராமேசுவரம்
32. கவி. ஸ்ரீ. S. A. ஸஞ்சீவி, சேலம்
33. R. K. பழனி அப்பா, சேலம்
34. ஸ்ரீ. V. துரைஸாமி அய்யர், பரமத்தி
35. ,, K. A. நடேசன், ஆட்டையாம்பட்டி
36. ஸ்ரீ. K. S. லக்ஷ்மண அய்யர், திருநெல்வேலி

பத்ரிகா நிர்வாஹ ஸமிதி:

1. ஸ்ரீ. T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, சென்னை
2. பண்டித ஸ்ரீ. S. நாராயண அய்யங்கார், கரூர்
3. ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. V. B. நடராஜ சாஸ்திரி, திருச்சி
4. வைத்யவாசஸ்பதி பண்டித ஸ்ரீ. P. S. ராமசர்மா, கரூர்
5. பண்டித ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசார்ய, ஸ்ரீரங்கம்
6. வைத்யவிசாரத ஸ்ரீ. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி
7. ஸ்ரீ. V. R. ஸுப்பிரமணிய அய்யர், திருச்சி
8. ஸ்ரீ. V. ஸுப்பிரமணிய அய்யர், ஸ்ரீரங்கம்
9. ஸ்ரீ. A. ராகவராவ், திருச்சி
10. ஸ்ரீ. K. ராகவன், சென்னை
11. ஸ்ரீ. V. S. வெங்கடஸுப்பிரமணிய சாஸ்திரி, சென்னை.

கோட்டக்கல் ஆர்யவைத்யசாலை தங்கவிழா :-

கோட்டக்கல்லில் வைத்யரத்னம் ஸ்ரீ. பி. எஸ். வாரியர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பாரதநாடெங்கும் தமது கிளைகளின் மூலம் ஆயுர்வேதத்தின் மகத்துவத்தைப் பரப்பிச் சிறந்த சேவைசெய்து வரும் ஆர்ய வைத்தியசாலையின் கனக ஜயந்தி மகோத்ஸவம் கோட்டக்கல்லில் 7-3-54ல் மிகச்சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. தங்க விழாவிற்கெனவே தனியாக கட்டப்பட்ட மாபெரும் ஜுபிளி நர்ஸிங் ஹோமின் வெளியில் தன்வந்தரிக்கொடி ஏற்றப்பட்டது. பாரத நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து குழுமியிருந்தனர். ஸ்ரீ. பி. எஸ். வாரியர் அவர்களின் பங்களாவான கைலாஸ மந்திரத்தில் ஸ்ரீ தன்வந்தரி (விச்வம்பர) பகவானின் ஸந்நிதிக்கெதிரில் அமைக்கப்பட்ட பெரும்பந்தலில் வைத்யரத்ன ஆயுர்வேத பிருஹஸ்பதி பண்டிட் ஸ்ரீ. சிவசர்மா (பம்பாய்) அவர்கள் தலைமையில் விழா நடந்தது. ஆர்ய வைத்தியசாலையின் மானேஜிங் டிரஸ்டி ஸ்ரீ. பி. கே. வாரியர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றார்.

கள்ளிக்கோட்டை மாத்ருபூமி பத்திரிகையின் ஆசிரியரும் முன்னாள் இலங்கையில் இந்தியாவின் ஹைகமிஷனருமான ஸ்ரீ. கே. பி. எஸ். மேனன் அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்தார்கள். ஆத்தூர் ஸ்ரீ. கிருஷ்ணபிஷாரடி அவர்கள் ஸம்ஸ்கிருதத்திலும் ஸாஹித்யகுசலன் ஸ்ரீ. பி. ராமமேனன் அவர்கள் மலையாளத்திலும் ஆர்ய வைத்யசாலையின் பெருமையைப் பற்றிப் பேசினார்கள். பிறகு ஆர்யவைத்ய கலாசாலையில் சலவைக்கல்லில் அமைக்கப்பட்ட காலஞ் சென்ற ஸ்ரீ. பி. எஸ். வாரியர் அவர்களின் உருவச்சிலை, (30000 ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது) சென்னை இந்தியவைத்ய இலாகா

கௌரவ டைரெக்டர் ஸ்ரீ எம். ஆர். குருஸ்வாமி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

39-வது அகிலபாரத ஆயுர்வேதமஹாஸம்மேளனம்—கோட்டக்கல்:

அன்று மாலை அகில பாரத ஆயுர்வேத மஹாஸம்மேளனம் பண்டிதஸ்ரீ சிவசர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக்கமிட்டித் தலைவர் ஸ்ரீ பி. வி. ஈசுவரவாரியர் அவர்கள் பிரதிநிதிகளை வரவேற்றார். ஸ்ரீ எம். ஆர். குருஸாமி முதலியார் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். காலஞ்சென்ற பி. மாதவவாரியர் அவர்களின் உருவப்படத்தை ஸ்ரீ சிவசர்மா அவர்கள் திறந்துவைத்தார்கள்.

பொருட்காட்சியை பெங்களூர் ஜயசாமராஜேந்திர இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியன் மெடிஸனின் தலைமை வைத்யர் திறந்துவைத்தார். மறுநாள் காலை நடந்த வித்யாபீட மகாநாட்டை வைத்யவிசாரத பி. கே. ராமுண்ணிமேனன் ஆரம்பித்துவைத்தார்கள். ஜயப்பூர் ராஜவைத்ய ஸ்ரீநந்த கிசோர்ஜீ தலைமை வகித்தார்கள். 9-3-54 அன்று காலை கேரள சிகித்ஸா ஸம்ப்ரதாய பரிஷத்து வைத்ய கலாநிதி பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ வயஸ்கர என். எஸ். மூஸ் அவர்கள் தலைமையிலும், மாலை தார்சனிக பரிஷத்து மதுரை பண்டித ஸ்ரீ எஸ். நாராயண அய்யங்கார் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. (விபரம் பின்னர்வெளிவரும்.)

வெங்கடரமண வைத்யசாலை & ஆயுர்வேத கலாசாலை ஸ்தாபகர் தினவிழா:

21—3—54 அன்று சென்னை நிதிமந்திரி கனம் சி. ஸுப்ரமண்யம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வைத்யவிசாரத ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் ஸ்தாபகர் நினைவுப்பேருரை நிகழ்த்தினார். ஸ்ரீ எம். ஸுப்பராய அய்யர் அவர்கள் ஸ்தாபனத்தின் நிர்வாஹத்தில் தலைவராக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீ கே. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள். (விபரம் அடுத்த இதழில்.)

திருச்சி ஆயுர்வேத ஸபா:

இவ்விழா 28-3-54 அன்று திருச்சி நகரில் ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் ஸபைத்தலைவர் ஸ்ரீ. வி. ஆர். ஸுப்ரமண்ய அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ. வி. பி. நடராஜ சாஸ்திரி அவர்கள் ஆரம்பப்பேருரையை நிகழ்த்தினார்கள். புதிய ஆண்டு நிர்வாஹத்திற்கு அங்கத்தினர்கள் தேர்ந்

தெடுக்கப்பட்டார்கள். ஸ்ரீ ஆர் வி ராம அய்யர் (கரூர்) தலைவர், ஸ்ரீ வி. ஆர். ஸுப்பிரமண்ய அய்யர், (திருச்சி) உபதலைவர், ஸ்ரீ டி. எஸ். ஈசுவர அய்யர் காரியதர்சி, ஸ்ரீ எஸ். எம். ஸுந்தரராஜாசார்ய, ஸ்ரீ எம். பி. முத்துராம அய்யர். ஸ்ரீ என். சி, எஸ். ராகவன், ஸ்ரீ பி. விசுவநாதன் - அங்கத்தினர்கள்.

அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின :—

1. சென்னை இந்திய வைத்தியக் கல்லூரியில் தற்காலம் அமுலி லிருக்கும் பாடத்திட்டத்தையும், பயிற்சியையும், சமீபகாலத்தில் ஆயுர்வேத முறையில் கற்பிக்கப்படும் அம்சத்தை மிகவும் குறைத் திருப்பதை, இச்சபை கண்டிப்பதுடன், அவ்விதமின்றி. திரும்பவும் இதர வைத்திய முறையைச் சிறிதும் கலக்காமல், சுத்த தேசீய வைத் திய முறைகளையே (ஆயுர்வேத சித்த வைத்திய முறைகளையே) பூர்ணமான அளவில் கற்பிக்க ஏற்பாடு செய்யவும், இக்கல்லூரிக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைப் பூராவாக, சுத்த இந்திய வைத் திய முறைகளுக்கே உபயோகப்படுத்தவும், அலோபதிக் வைத்திய முறைக்குச் சிறிதும் உபயோகிக்காமல் இருக்கவும், சென்னை சர்க்கா ரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2. மேலே குறிப்பிட்ட காரியங்களை கிரியாம்சையில் நிறை வேற்றுவதற்கு. சென்னை சட்டசபை அங்கத்தினர்கள், மந்திரிகள் இவர்களைத் தனியாக பேட்டிகண்டு, வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்நவெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலையில் மார்ச் மாதத்தில் சிகிச்சைபெற்றவர்கள்.

ஆண்கள்	1831	மொத்தம் 4857
பெண்கள்	1740	
சிறுவர்கள்	1286	

வைத்யசந்த்ரிகை

பழைய காபிகள்— கொஞ்ச காபிகளே கைவச முள்ளன.

12 ஸஞ்சிகை விலை ரூபா இரண்டே.

தபால் சார்ஜ் தனி.

ஸ்ரீ தந்வந்தரயே நம:

அப்யுதய கேந்த்ரம்.

நேயர்களே,

நம் கஷ்டங்கள் தினம் தினம் பெருகுகின்றன. இனி தூங்காது நாம் பற்பல காரியங்களையும் செய்து நம் ஜனங்களின் க்ஷேமத்தையும், நம் க்ஷேமத்தையும் பெருக்கிக் கொள்ளவேண்டும்.

ஸ்வதந்திரம் வந்ததும் நம் கஷ்டங்கள் விடியும் என்றும், நம் தலைவர்கள் நம் கலைவளர்ச்சிக்குப் பெரிதும் வழி செய்வார்கள் என்றும் நம்பி ஏமாந்தோம். கலைவளர்ச்சிக்கு கலைஞனே சர்வாதிகாரம் பெற்றியங்கவேண்டுமே யொழிய மற்றவர்கள் எடுத்துக் கொள்ளமுடியாது என்ற உண்மையை சிறிது மறந்து பிறர் கையை எதிர்பார்த்து நாம் இது காறும் வாளாவிருந்துவிட்டோம். நம் கலையை அறிந்து காக்க ஆற்றலும் ஆர்வமும் படைக்காத இந்தியன் மெடிக்கல் கௌன்சில் மூலம் பலப்படுத்தப்பட்டு பிரசாரத்திலும் நிர்வாகத்திலும் புகுந்துகொண்டு இன்று வைத்திய கைங்கரியத்திலும் போதனை விஷயங்களிலும் சர்வாதிகாரிகளாக அலோபதிக் வைத்தியர்களிருக்கிறார்களே என்றால், அது அவர்களுடைய சாமர்த்தியம் என்று தானே நாம் ஒப்ப வேண்டும்! அரசாங்கம் அவர்கள் மூலமே ஆட்டுவிக்கப் படுகிறது இத்துறையில் என்றால் மிகையாகாது.

ஏகாதிபத்ய வெறிபிடித்த அன்னியனை விரட்டி நாட்டிற்கு ஸ்வதந்திரம் கொண்டுவந்த நம் தலைவர்கள் இந்தக் கலை விஷயத்தில் இன்னமும் விழிப்புறவில்லை. அதனாலேயேதான் ஆயுர்வேத வளர்ச்சிக்கு இந்த அலோபதிக் வைத்தியர்களின் யோசனை

யை பத்தியமாகக் கொள்ளுகிறார்கள். அவர்கள் நேர்மையுடன் "ஆயுர்வேதம் எங்கள் அனுபவத்திற்குப் புறம்பானது; அந்த கலைஞர்களைக் கொண்டே உங்கள் இஷ்டம்போல் இயங்குங்கள்" என்று கூறி இருந்தால் அவர்கள் போலி விஞ்ஞான மனப்பான்மையில் ஊறி இருக்கிறார்கள் என்று நாம் குறைகூறமாட்டோம். அரசாங்கமும் இந்த 7 வருடங்களில் ஆயுர்வேதத்தை பல மடங்கு சோபிக்கச்செய்து தேசசேவையில் முன்னணியில் நிற்பார்கள். அந்த பாக்கியம் கிட்ட இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ?

ஒன்று நாம் உறுதியாக சொல்லலாம். நம் பாரதநாடு க்ஷேமம்பெற்று உலகினருக்கே புதிய ஒளியையும் உற்சாகத்தையும் அளிக்கும் நிலைக்கு உயர, நம் புராதன இந்திய கலைகள் புத்துயிர் பெறவேண்டும். அவைகள் இவ்வளவு நூற்றாண்டுகளாக பலவித இடைஞ்சல்களுக்கிடையில், அரசாங்கங்களின் எதிர்ப்பையும் சமாளித்து நின்று ஜீவனைக்காப்பாற்றியிருப்பதின் ரகஸியம் அவைகள் தர்சனங்களின் அடிப்படையில் விஸ்தாரமாக அறியப்பட்டு நம் முன்னோர்களால் லோகோபகாரமாக அளிக்கப் பட்டன என்பதே. ஆகையினால் அவைகள் அதிலும் முக்கியமாக இந்தியாவின் தனிச்சிறப்பான ஆயுர்வேதம் ஒருகாலும் அழிக்கப்படாது. பல வேறு பாகங்களும் தொடர்ந்து காப்பாற்றப்படும். தென்தேசமாகிய நம் தமிழ்நாட்டில் சித்தர்களால் வளர்க்கப்பட்டு சித்தவைத்தியம் என்ற சிறப்புப்பெயரைப் பெற்று இயங்குகிறது. மற்றைய பாகங்களில் காரணப் பெயரைப் பெற்று ஆயுளைவளர்க்கவும் காப்பாற்றவும் உதவும் ஆயுர்வேதம் என்றே இன்று வரையிலும் போற்றப்பட்டு வருகிறது. வெளி நாட்டிற்கும் இந்த ஞானம் பரவி யுனானி என்ற பெயரால் சிறிதளவு வித்தியாசமே தோன்றுவித்துக்கொண்டு நம் நாட்டுக்கு வந்து சேவை செய்கிறது. ஆகையினால் ஆயுர்வேதம் சிரஞ்சீவி. அதை அவலம்பித்து நாம் பயனடைய ஸ்வதந்திரம் இல்லாத அவல நிலையை நம் விரோதிகள் சூழ்ச்சிகளாலும் அல்பத்தனத்தாலும் நீடிக்க, நம் தலைவர்களையும்கூட ஏமாற்றி வெற்றிபெறுகிறார்களே! என்னே காலத்தின் வஞ்சம் இது! என்றுதான் சிறிது மலைக்கிறோம்.

ஆம். நாம் மலேப்பது தவறு. காலம் தர்மத்தை விட்டுப் பிறழாது. நாம் நம் கடமையை செய்யத் தவறினேம். அதன் விளைவை அனுபவிக்காது தப்பமுடியாது என்பதை இந்தக்காலத் தின் கோலம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இனியாவது ஒரு கணமும் தயக்கம்செய்யாது நம் கடமையை செய்யத்துவக்குவோம். நாம் ஜனங்களின் மத்தியில் பிராணபிசரர் களாக சிகிச்சை செய்யவேண்டும் என்றே சாஸ்திரம் விதித்தது. அந்த சிகிச்சையை பூர்த்தியாக செய்விக்க நான்கு தொகுப்பினர் கள் பூர்ணமாக ஒத்துழைக்கவேண்டும் என்பது முக்கியமான விதி. அதாவது வைத்தியர், நோயாளி நோயாளிக்கு சுச்ருஷை செய்கிற வர்கள், ஔடதம் தயாரிப்பவர்கள் என்ற இந்த நான்கு தொகுப் பினர்களும் ஒத்துழைக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும் இன்னவித யோக்யதைகள் பெருகியிருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டது நம் சாஸ்திரம். ஆகவே இந்த நான்கு பாதங்களிலும் பூர்த்தியாகத் தேறி இயங்க வேண்டிய எல்லாவித பணிகளையும் உவகையுடனும் பக்தியுடனும் நாம் ஒவ்வொருவரும் செய்ய முன் வரவேண்டும். இது பெரிய யாகம்போன்ற புனிதமான கைங்கரி யம். நாம் பலரும் கூட்டுறவில் இயங்கினுல் ஒழிய சாத்தியமில்லே. அந்தக் கூட்டுறவை வகுத்து ஊக்குவித்து படிப்படியாக நம் கலேயையும் அதன் சேவையையும் வளர்த்து ஜனங்களே அறம், பொருள், இன்பம் துய்க்க என்று நாம் எல்லோரும் பலம்பெற்று விளங்குவோமோ; அன்றே ஆயுர்வேத சாம்ராஜ்ய சித்தி பெற்ருேம் எனலாம். அதுகாலே துரைத்தனம் போலி விஞ்ஞானி களின் பிடியிலிருந்து விடுபட்டு நம்முடைய கூட்டுறவைப் பெற்று நன்கு செயல் புரியும்.

இந்த பெரும்காரியத்தை சாதிக்க நம் ஆயுர்வேத மண்டலம் உறுதிகொண்டுள்ளது. அதை செயல்படச் செய்ய அங்கத்தினர் களின் தொடர்ந்த உழைப்புதான் ஆற்றல் பெற்றது. அதற்கு வேண்டியே பெருவாரியாக நம் ஆயுர்வேதமகாமண்டலத்தில் சேருங்கள் என்று வைத்தியர்கள் எல்லோரையும் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கத்தினர் சந்தாவை (ரூ. 5–0–0) உடனே மண்டலத்திற்கு அனுப்புவதுடன் உங்கள் வைத்தியரல்லாத சிநேகிதர்களேயும் நம் மண்டலப் பத்திரிகையாகிய **“வைத்திய**

அப்யுதய கேந்திரம் அமைக்க அனுமதி கோரி வரும் கடிதங்களை வரவேற்கிறேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக. அப்யுதய கேந்திரம் வகுத்து அப்யுதயசமாஜத்தை உருவாக்கி ஆயுர்வேத சாம்ராஜ்ய சித்தியை உருவாக்கும் பணியில், வைத்திய சிரேஷ்டர்களே ! உணர்ச்சியுடன் முந்திக்கொள்ளுங்கள்.

கேந்திரங்களின் அபிவிருத்தியை வைத்திய சந்திரிகை மூலம் பலருக்கும் அறிவித்து 'வைத்யர்களே ! தூங்காதீர்கள்' என்று உற்சாகப் படுத்துவோம்.

உங்கள் ஊழியன்

த. வீ. ராதாகிருஷ்ண சாஸ்திரி,

(தமிழ்நாடு ஆயுர்வேத
மகாமண்டலத் தலைவர்)
23. சிங்காரிநாயக்கன் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்—4.

மது சர்க்கரை—2-வது பாகம்.

(பிரமேய நூல்.)

By மு. வை. வே. ரா.

(By courtesy of the Journal of Indian Medicine, Madras.)

இதுவரை கூறிய வகையாவது: "பிரம்மம்" ஒன்றுதான் உளது. மற்றவை யாவும் இலது. அப்பிரமத்துடன் இரண்டறக் கலத்தலே சீவனின் மோக்ஷமாகும். இத்தத்துவத்தை ஞான மார்க்கத்தினால் அறிந்து பெறலாம். யோக சாதனையும் இதற்கனுகூலமாகும் என்ற முடிவு கண்டோம். இதற்குச் சான்றாக வேதங்களையும், உபநிடதுகளையும், சூத்ரங்களையும், சூத்திரபாஷ்யங்களையும் எடுத்துக்கூறுவர். ஞான மார்க்கத்தையோ அல்லது யோக மார்க்கத்தையோ பின்பற்றல் ஏதோ ஒரு சிலருக்கு மட்டுமே சாதிக்க முடியுமேயன்றி பெரும்பாலரான மக்கட்கு இவ்வுபாயங்கள் ஏற்கக்கூடியவையல்ல. பெரும்பாலரான இவர்கள் பிறவியின் பயனை பெறாமலேயே பிறவிக்கடலில் மூழ்கிக் கிடத்தல் வேண்டுமன்றோ? இவர்கட்கு நற்கதி வாய்க்க யாதொரு வழியும் வகுக்கப்படவில்லையா? மேலும் ஏகமாய் நின்ற பிரமம் இன்னதென்று வகுத்து வைக்க முடியாததென்று நூல்கள் கூறுமேல், இன்னதென்றும் இத்தன்மையதென்றும் வகுக்கமுடியாததனை அறிவினால் எவ்விதம் காண்டல் கூடும். அல்லாதலும் அபேதமாய் அகுணமாய் ஏகமாய் நிற்கும் "பிரம்மம்" ஒன்றுதான் நாம் அறியக்கிடக்கும் தத்துவமாகுமென்று சுருதிகள் ஒருபுறம் முறையிட, பேதம் என்று சொல்லும் சுருதியின் மற்றொரு பாகத்திற்கும் பேதாபேதம் என்று சொல்லும் அதே சுருதியின் மூன்றாம் பகுதிக்கும் பிராமாண்யமில்லை அவை பிதற்றல் என்று நீக்கத்தக்கதாகுமா? அல்லது அவையும் ஏற்றுக்கொள்ளத்தக்கனவா? அவ்வண்ணமே, கர்மமார்க்கம் பக்திமார்க்கம் என்றெல்லாம் வகுக்கப்பட்ட வழிகள் பயனற்றவையா? பிரமத்தைச் சகுணம் என்றும் உலகம் உளது என்றும் வர்ணிக்கும் சுருதி வாக்கியங்கள் பொருளில்லாத மொழிகளா? இவ்வித வினாக்கட்கு விடைகூறிய வகையிலும், குறிப்பிட்ட ஒரு சிலரேயன்றி பாமரர், பண்டிதர் யாவர்க்குமே பயன்படக்கூடியது சில விளக்கமான பொருள்கள் அவ்வேத வாக்கியங்கட்கே கொடுக்கப்பட்டு, அவ்வழியாய் உதவிய "பிரத்யபிக்ஞாதரிசனம்" சைவ

இம்மரபுகளின் விசாரணையே இவ்வத்தியாயத்தில் கூறப்படும். கர்ம மார்க்கத்தால் மோக்ஷம் பெறலாம் என்பதை உன்னிப் பார்க்கின் ஈசன் ஒருவன் உளன் என்பதையே ஏற்காத மீமாம்சகர்கள் இந்திரன், அக்னி போன்ற பல்வேறு தெய்வங்களிருத்தலை ஏற்றலும் யாகாதி கர்மங்களால் மந்த்ர மூர்த்திகளான அவரைத் திருப்திசெய்து அதனுல் "சோர்க்கம்" என்றும் லோகாந்தரத்தைப் பெற்றுச் சுகம் அனுபவிக்கலாம் என்று சொல்வதும் அவரை முற்றும் எதிர்க்கும் அத்துவித மதத்தினர் ஞானமார்க்கம் ஒன்றையே ஏற்றலும் ஒரு விஷயத்தின் இருகோடியாகும். இவ்விருகோடியினருக்கும் வேண்டிய சான்றுகள் வேதத்தில் கிடக்கின்றன. இவற்றுள் எது சரியானது என்று நிர்ணயித்தல் எவ்விதம்? வேதத்தில் சொல்லும் சில பாகங்களைமட்டுமே ஏற்று ஏனைய பாகங்களை தவிர்த்தல் நன்றன்று. இதற்கு மாருக சைவசித்தாந்தமோ என்ருல் இரண்டுபாகங்களையும் ஏற்று ஒன்றுபடுத்தி ஞானமும் கர்மமும் வேண்டியவைதான் என்று வற்புறுத்தி "ஞானகர்ம சமுச்சயம்" என்ற தத்துவத்தை விளக்குகிறது. அவ்வண்ணமே அபேதம், பேதம் என்னும் இரண்டு கோடியையும் ஏற்று பேதாபேதம் என்னும் தத்துவத்தை வற்புறுத்துகிறது. அவ்வாறே நிற்குண பிரம்மம் சகுணமானதென்றும் அது உருவாயும் அருவாயும் உளதாயும் இலதாயும் அணுவில் அணுவாயும் மேருவினும் வலிதாயும் ஆயினும் "வாக்கு அன்றி மனத்தினிற்கும் எட்டா"ததாயும் உளது என்றும் சகலமத சமரஸமான முடிவைக் கூறியுள்ளார்.

இச்சிந்தாந்தப்படி யாவற்றிலும் மேலான பொருளாய் தலைமையில் நிற்கும் தலைவனுய் உளது "சிவன்" என்னும் தத்துவம். இவனே ஈசன், இறை, இறைவனென்றும், பதியென்றும் அழைப்பதன்றி குறிப்பிட்ட ஒரு மொழியில் உள்ள சொற்கள் யாவுமே இவனைக்குறிப்பவையாகும். அதாவது இவன் ஸர்வசப்தவாச்யன் என்றும் சொல்வர். சீவாத்துமாக்கள் உண்டென்றும் அவை ஒவ்வொரு சரீரத்திற்கும் ஒன்று விகிதமாக பலகோடியுளவென்றும் ஆயினும் இவ்வான்மாக்கள் முன்சொன்ன பரனின் திரிபே என்றுங் கூறுகிறது. இவ்வண்ணம்தான் அவனே என்றறிதற்கு முயற்சித்தலே பிறவியைப் பெற்ற ஆன்மா செய்யத்தக்கதாகும். இதுவே ஆன்மாவிற்கு மோக்ஷம்.

ஈசனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள சம்பந்தத்திற்கு "தாதான்மியம்" (அவ்வண்ணமாயிருத்தல்) என்று பெயர். பட (துணி) மாகிற காரியத்திற்கு நூல் முதற்காரணமாயும், துணைக்காரணமாயும் இருப்பதுபோல் நூலின் சேர்க்கை (நேசவு) யும் ஒரு காரணமாமன்றோ? நூலின் சேர்க்கைக்கும் காரியமாகிற படத்திற்கும் உள்ள சம்பந்தத்தைத் தாதான்மியம் என்பர். இத்தாதான்மியம் காரணமாகிற நூல் காரியமாகிற படம் என்னுமிரண்டையுமேய திட்டித்ததாயுள்ளது முக்கியமாகவும் கவனிக்கத்தக்கது. ஆன்மாக்களுக்கும் ஈசனுக்கும் உள்ள சம்பந்தம் தாதான்மியம் என்றதால் பல்கோடி ஆத்மாக்களின் சேர்க்கையே ஈசனும் என்பதை இதனால் புலனாகின்றது. இங்கு பேதம் அபேதம் இரண்டுமே ஏற்கப்பட்டுளது என்றறியக்கிடக்கிறது. இதனால், தானே அவன் என்பது ஒரு ஆன்மா அறிதலே பிறவிப்பயனும் என்பது விளங்குகிறது. இது ஞானமார்க்கமாகும். இவ்வறிவைப் பெறற்கு கர்ம மார்க்கமும் உதவியாய் ஏற்கத்தக்கது என்பதை சைவ சிந்தாந்தம் விளக்கும். மேற்சொன்னவண்ணம் ஈசனினின்றும் வேறுபடாததான ஆன்மா தான் யார் என்பதை மறந்தது எங்ஙனம் என்றால் அஞ்ஞானத்தினால் உண்மைநிலை மூடப்பட்டு தன்னைத்தான் அறியமாட்டாமை வந்து கூடிற்றென்பதேயாம். திரும்பவும் நினைப்பூட்டிக்கொண்டறிதலே மோக்ஷமாகுமென்று "பிரத்யபிக்ஞா தரிசனம்" கூறும். பிரத்யபிக்ஞா என்றால் :– "பண்டொருமுறை நான் கண்ட தேவதத்தனே என்முன் நிற்கும் இவன்" என்று அறிதற்கு பிரத்யபக்ஞை என்று பெயர். இதற்கு ஸ்மிருதி அனுபவம் இரண்டும் வேண்டும். இதனால் அகம் பிரம்மாஸ்மி என்னும் முடிவான நிலை கிடைக்குமென்பது ஞானமார்க்கத்தை மாத்திரமே ஏற்கும். இம்மதத்தினரின் கொள்கையாகும்.

சைவ சித்தாந்தமோ என்றால் ஞான கருமமிரண்டையுமே ஏற்று ஈசனை சிவனென்றழைத்து "சிவோகம்" (நானே சிவன்) என்று அறிதல் ஞானமார்க்கத்தைத் தழுவியதாயும், அவ்வறிவைப் பெறற்கு உபாயமாக கூறப்பட்டுள்ள ஜபம், தியானம், சரியை என்பவை கரும மார்க்கத்தை தழுவியதாயும் வகுத்துள்ளது. இவற்றின் வாயிலாய் உண்மையைக் காணவொட்டாது மறைக்கும் அஞ்ஞானத்தைப் போக்கி "சிவோகம்" என்ற மெய்ஞானத்தைப் பெற்று ஓர் ஆன்மா ஈசனுடன் இரண்டற நிலையைப்பெறல் என்ற ஞான கர்ம சமுச்சயமாம் ஒரு மார்க்கம் வகுத்துக்காட்டப்பட்டது.

"ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீ பாசத்தோடுளே காண்—ஒன்றின்றால்
அக்கரங்களின்றும் அகர உயிரின்றேல்
இக்கிரமத் தென்னுமிருக்கு"

[சிவஞானபோதம் சித்தாந்தம்
முதலதிகரணம் 2 சூத்ர விளக்கம் 7]

"அரக்கொடு சேர்த்தி அனைத்த அக்கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந்தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று" 9

இவ்விரண்டு செய்யுட்களும் ஆன்மாவிற்கும் ஈசனுக்கும் உள்ள தாதான்மியத்தை விளக்கி ஒருவகையில் இவ்விரண்டும் வெவ்வேறென்றும் மற்றொரு வகையில் இரண்டும் ஒன்றேயாம் என்றும் ஏற்கும் கொள்கையை விளக்குகின்றன.

மேலும் ஆன்மா பேதமானது என்று ஏற்கும் தருணத்து, அவ் வினையைச் செய்தவனில்;

"அவ்வினைஞர் தாஞ் சென்றங்
கவ்வினையைக் காய்ந்த பசாசம்போல்—அவ்வினையைப்
போமல் ஊட்டும் பிரானின் நுகராரேல்
ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" Do. Do. 11

"நெல்லிற்குமியும் நிகழுஞ் செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே—வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள்
அலர் சோகஞ்செய் கமலத்தான்" Do. Do. 12

என்னும் இச்செய்யுள்களால் உலகத்தில் பிறவியைப்பெற்ற ஆன்மா சுகதுக்க அனுபவங்கள் யாவற்றையும் "அவனிடமாய்" பெறுகின்றனவென்றும் அவ்வான்மாவின் வினையே அதற்கு காரண மாமென்றும் விளக்கப்பட்டிருப்பது காணக்கிடக்கிறது. ஆயினும்

"எங்குமுள தென்றளவை ஒன்றன்று இரண்டென்னில்
எங்குமுளன் அன்றெவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லைப் பொன்றொளிபோலீசன்
அவையுடைமை யாளா நாம் அங்கு" 15

என்னும் செய்யுளால் பேதமாயும் அபேதமாயும் சொல்லப்பட்ட தத்துவங்களை ஒன்றிபடுத்தி பேதாபேதம் என்ற சித்தாந்தத்தின் கொள்கை விளங்கும். சுருக்கத்திலிவ்வண்ணமானது சைவ சித்தாந்தம். இனி சைவசித்தாந்தம் விளக்கவோம்

சைவ சித்தாந்தம்.

சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கின்கண் முதன்மையானது சிவஞான போதமென்னும் நூலாகும். இச்சித்தாந்தத்திற்கு ஆணிவேர்போன்ற இந்நூலில் பனிரெண்டு சூத்திரங்களுள. இவற்றைப் பொதுவதிகாரமென்றும் உண்மையதிகாரமென்றும், இருபகுதிகளாகப் பிரிக்கலாம். பொதுவதிகாரத்தில் முதற்பகுதியில் பதி பசு பாசமென்னும் தத்துவங்களின் உண்மைக்குப் பிரமாணங்களும், இறுதிப்பகுதியில் இத்தத்துவங்களி னிலக்கணமுங் கூறப்பட்டுள்ளன. அவ்வாறே உண்மையதிகாரத்தின் முதற்பகுதியில் சாதனமும் அச்சாதனங்களால் பெறக்கிடக்கும் பயனை இறுதியினும் கூறப்பட்டிருக்கக் காண்கிறோம்.

பேதாபேதத்தைச் சைவ சித்தாந்தம் ஏற்கிறது. மேலும் இது நிற்குண பிரம்மத்தையும் சுகுன பிரம்மத்தையும் சமமாக ஏற்கிறது. பிரம்மத்தை இச்சமயத்தில் பதி என்றும் சிவன் என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். ஆன்மாக்கள் உண்டென்றும் அவை பலகோடியென்றும் பிறப்பும், இறப்பும்; சுகமும், துக்கமுமெல்லாம் கன்மத்தின் பயனாய் விளைவனவென்றுஞ் சொல்லுகிறது. சிவம் குறிப்பிட்ட ஆன்மாவின் கன்மத்தையோட்டி அதற்குப் பிறப்பை அளிப்பதல்லாது அத்துடன் தனது சித்சக்தியையும் நிலைக்கச் செய்கிறன், முதற்சொன்ன வகையில் பேதமும், பின்சொன்ன வகையில் அபேதமும் ஏற்கப்பட்டது. இதனால் விளங்கும் சிவம் என்னும் பதி ஒருவகையில் ஞானப்பிழம்பாய் மாற்றமொன்றுமின்றி தன்னைத் தெரிவிக்கும் இயல்பை மட்டும் பெற்று நிற்கும். இச்சிவத்தின் மற்றொரு அம்சம் தன் ஒளியை உலகத்தின்மேல் வீசி இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் அறியப்படும் நிலையை அடைவிக்கும். இவ்வொளியின் ஒரு கணமே உலகிலுள்ள சட அசடப் பொருள்கள் யாவற்றிலும் உட்புகுந்திருத்தலால் அவை அறியப்படும் இயலைப் பெறலாயின. சிவத்தின் நிலையைப் ப்ரிதியும் அவன் கதிரும் போலாகுமென்று விவரித்துள்ளார். சூரியன் தனது சோதியால் தன்னைக் காண்டற்குக் கிடைக்கும் வண்ணம் செய்வதன்றி தன் ஒளியால் ஏனையவற்றை காணக்கிடக்குமாறுஞ் செய்வித்தலே போல பதியின் ஞானமாகிற அம்சம் சிவம் என்ற பெயரும், மற்றொரு பாகமாகிய ஒளிக்கு சக்தியென்றும் சைவசித்தாந்தங் கூறும். ஆகவே சிவமும் சத்தியும் சேர்ந்த தனிப்பெருஞ் சோதி சொருபத்

திற்குப் பதியென்னும் பெயர் வழங்கலாயிற்று. மேற்சொன்ன சக்திக்குச் சிவசக்தியென்றும் அருள் என்றும் பெயருண்டு. அருள் இன்றி அவனிலன். அவனை அறிவுக்கு எட்டுவிப்பதும் அவ்வருளே யாகுமென்று சித்தாந்தம் வற்புறுத்துகிறது. இங்கு சட அசடப் பொருளிலும் பகுந்து நின்று அப்பொருள்களுக்குத் தோன்றல், நிற்றல், மறைதல் (மூவித அவத்தையும்) ஆகியவற்றை அளித்தற்கு காரணமாயிருப்பது இப்பதியின் அருளென்னும் பகுதியேயாகும். இதனால் அவனருள் சொரியும்பொழுது விரிவைப் பெறும் இவ் வுலகின் போக்கைச் சிருட்டியென்றும், அவ்வருளினால் உண்டான சட அசடப்பொருள்கள் இங்கிருக்குங்காலத்தை ஸ்திதி என்றும் அவ்வருள் அவனிச்சையால் அவனுள் சென்றடங்கு நேரத்து அருளின் இன்மையால் இருத்தற்கு இயலாததாய் இவ்வுலகமும் அவனுட் சென்றடங்கி மறையும் அல்லது அழியும். இதையே பிரளயம் என்றுஞ் சொல்வர்.

சிவனைப் பிரளய கர்த்தாவென்று சகல வேத சாத்திரங்களும் வகுத்துள்ளதை மறுக்கவியலாது. பிரளயத்திற்குப் பின் சிருட்டி யைத் துவக்குங்கால் சிருட்டிக்கு இன்றியமையாத உபாதானங்கள் யாவும் பிரளய காலத்தில் எச்சிவத்தினுள் ஒடுங்கி நின்றனவோ அச்சிவனையல்லால் மற்றெவர்க்கும் அவ்வுபதானப் பொருள்கள் பெறக்கிட்டா. ஆதலின் அச்சிவனாலேயே அவ்வுபாதானங்களைக் கொண்டு சிருட்டியும் தொடங்கமுடியுமென்று எளிதில் விளங்கு மாதலின் சிவனே முதற்பொருளாம் என்று சைவ சித்தாந்தம் அணுவளவுமையமின்றியும் அற்பமும் திரிபின்றியும் வற்புறுத்தி விளக்கும்.

சீவான்மாவென்பது ஒவ்வொரு சரீரத்திலும் தணித்து நிற்கும் உயிர்ப்பேறுகும். (பேறு—ஐஸ்வரியம்) இதனை ஒரு சிலர் அசடப் பொருளென்பர். இவ்வான்மாவும் பதியினிடமாய் உண்டானதான தாலும் அந்தர்யாமி என்ற நிலையில் தன்னுட் கிடக்கும் பதியின் ஒரு சிறு அணுவுக்கு தான் சரீரமாய் நின்று அப்பதியினால் இயக்கப்படுவே தாயினும் அப்பதியின் ஆணையைத் தவிர்க்கமாட்டாததாயும் நிற்கும்.

இப்படி ஆன்மா சடப்பொருள் இரண்டினாலும் ஆகிய இவ் வுலகத்தையே சரீரமென பதியென்னும் சிவன் ஏற்று அணுவினுள் அணுவாகியும் உயிர்க்குயிராயும் நின்று இவ்வுலகையே நிலைநிறுத்தி

யும் தன்னிச்சைப்படி ஆட்டுவித்தும் தனது இச்சையாலே அழித்தலும் செய்வதால் பேதமும் அபேதமும் விளக்கப்பட்டது காண்க. (இதற்குதாரணமாக நமது சரீரத்தின் அமைப்பையே கூறலாம்.) இவ்விதம் சடப்பொருளாலான இச்சரீரத்தினுள் சரீரியாய் நிற்கும் நிலை இவ்வான்மாவிற்கு வந்ததேன்? கன்மத்தினலென்று விளக்கப்பட்டது தன்னுட் கிடக்கும் (அந்தர்யாமியாய்) பரம்பொருளை இவ்வான்மா உணரமாட்டாமைக்குக் காரணம் யாதெனில் அது தன்னைச் சார்ந்த மலங்ளேயாம். இம்மலங்களை நீக்கும் உபாயத்தை யறிந்து அவற்றை அறவே வொழித்திடின் இவ்வான்மா "தன்னையுங் கண்டு தனக்காதாரமாம் தலைவனையுங் கண்டு தானே அத்தலைவனுய் விளங்குவன்". இதுவே சைவ சித்தாந்தம் வகுக்கும் மாபேறுகும்.

மேற்சொன்ன மலங்களின் சேர்க்கையால், தானே அவன் என்னும் உண்மையை அறியமாட்டாமல் கிடக்கும் இவ்வான்மா அதனுல் "சிவோகம்" என்னும் உண்மை நிலையை அறியாமல் மாயையில் கிடந்து உழல்கிறுன்.

சற்குருவின் உபதேசத்தின் வாயிலாய் சிவதீக்கைப் பெற்ற ஒருவன் ஜெபம், தியானம், சரியை என்ற மூன்று உபாயங்களால் ஈசனருளைப்பெற்று மேற்சொன்ன ஆறு தத்துவங்களையறிந்து (பதி, பசு, பாசம், மாயா, மாயேயம், திரோதானம்) மலங்களைக் களைந்து அகக்கண்ணுல் அருட்பெருஞ் சோதியைக்கண்டு ஆனந்தத்தைப் பெற்று அச்சோதியுடன் இரண்டற்ற நிலையில் முடிவற்ற ஆனந்தத்தில் மூழ்குவான். இதுவே சைவ சித்தாந்தம் வகுத்துக்காட்டிய முத்திப்பேறும்.

இவ்விதம் முத்திபெற்ற ஆன்மா (பசு) திரும்பவும் வாராது. (பிறப்பிறப்பற்று நிற்கும்.)

இப்பேற்றைப் பெற்றவான்மா மறுபடியும் பிறக்க நேராது. பிறத்தலாவது :– தான் செய்த கன்மங்கட்கேற்றதாய் சுகதுக்கங்களை யனுபவித்தற்குத் தக்கதாயும் அச்சுகதுக்கங்களை வல்லான் வகுத்த விதிப்படியுணரவல்ல பொறி புலன்களையுமுடையதாயுமாய் ஒரு சரீரத்தைப் பெற்று பிறப்பிறப்புக் கடலில் உழல்வது.

பேதாபேத வாதத்தை யடிப்படையாக்கியுள்ள சைவ சித்தாந்தத்தின் கொள்கைப்படி பதியும் பசுவும் ஒன்றே. ஆயினும் பாசத்தோடு கூடியிருப்பதால் பசுவினால் தான் யார் என்பது அறியக் கூடாமை என்பதை

"ஒன்றென்ற தோன்றேகாண் ஒன்றே பதி பசுவாம்
....................**7–2–1** சிவஞான போதம், பக்கம் 31

என்னுஞ் செய்யுள் விளக்குகிறது மற்றும்,

"*அத்துவிதமென்ற சொல்லானே ஏகமென்னில், ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிட்டு*" [வார்த்திகம் 7-B]

என்றதால் அத்துவிதம் என்ற பதத்தினாலேயே ஈசனும் ஆன்மாவும் இரண்டற ஒன்றுபட்டவை என்ற பொருள் கிடைப்பதாயினும் ஏகம் என்று மற்றுமோருமுறை வற்புறுத்தல் சொன்னதைச் சொல்லலாகாதோவென்னும் ஆசங்கையைத் தாமே யுண்டாக்கிச் சமாதானமுஞ்சொல்லி சுபக்கத்தை நிலையுறுத்தல் போற்றத்தக்கது. இங்கு

1. *பதிப்பொருளை யோரினமாக்கிச் சிவனையதனுள் ஒன்றாய்க் கணித்தற்காகாது என்பதை வலியுறுத்தவும்,*

2. *அச்சிவனின் அருட்பெருக்கினாற்றோன்றிய உலகம் சத்தியமானதென்று வாதிக்குங்கால் உள்ளத்திலிருந்துதான் உள்ளது விளையும் என்ற சத்கார்யவாதத்தைத் தழுவி, அச்சத்தி (அருளை) யைச் சிவனிடமிருந்து வேறுபட்டதாய்க் கொள்ளக் கூடாது என்பதையும் விளக்கியிருத்தல் காண்க.*

இதற்குதாகரணமாக 'அ'கரம் முதலான உயிரெழுத்து மெய்யெழுத்துடன் சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாயாவதைக் குறிப்பிட்டுள்ளார். மற்றும் 'அ'கரம் முதலான என்றதால் ஓரெழுத்தினுள்ளடங்கிய மூவெழுத்தின் பொருளையும் அதிலும் முதலெழுத்தின் பொருளில் புதைந்திருக்குஞ் சூக்குமத்தினுட் பொருளையுஞ் சுட்டியதாகுமென்று சமய வல்லுவருரைப்பர். அடியனேன் சமயாசாரியனல்லனாதலின் அவ்விளக்கத்தை இங்கு விவரித்தற்காகாது. இது மன்னிக்கத் தக்கதாகும்.

1. பதியை ஓரினப்பொருளாக்குதலுங் கூடுமோவென்னில் ஆம் என்பது முதற்சூத்திரத்தின் முதல் வாக்கியத்திற் காண்க.

"..........என்னுதலிற்றோவெனின் சங்காரகாரணனுயுள்ள முதலேயே, முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதுணர்த்துதல் நுதலிற்று."

இவ்வார்த்திகத்தின் உரையாசிரியர் மேற்குறித்த சங்கையை தீர்த்திருப்பதையுங் காண்க.

'சங்காரகாரணனுயுள்ள' என்றதால் வேறு காரணனுருமுண்டு என்று கிடைக்கப்படுகிறது. அன்றியும் "நிவிர்த்திகலை முதலிய பஞ்ச கலைகளுட்பட்ட ஐவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங்காரத்தைச் செய்யும் வினை முதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற்கடவுளாக வுடைத்து...................உலகம்..................." மற்றும்,

2. 'முதலேயே' என்ற சொல்லின் "ஏகாரம், இயைபின்மை நீக்குதற்கும் பிறதினியைவு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிதினியைவு" என்னுமிம்மேற்கோள்களால் அத்துவிதம் ஏகம் என்னுமிரு சொற்களும் முக்கிய வாக்கியத்தின் பொருளையூட்ட இன்றியமையாதவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகிறது.

"பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும் போலெங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவிதமாதல் அருமறைகளொன்றென்று
தத்துவிதம் என்றறையும் ஆங்கு"

(8-2-1 சிவஞானபோதம் 32 பக்கம்)

என்ற செய்யுளால் காரியப்பொருளான இவ்வுலகில், "தன்னருள் வெளிக்குளே யகிலாண்டகோடியெலாந் தங்கும்படிக்கிச்சை வைத்து உயிரினிற்குயிராய்த் தட்டாமல் நின்ற பொருளே" அணுவினுள்ளணுவாகி நிற்கும் ஈசனின் இரண்டற்ற நிலை என விளக்கியுள்ள தத்துவமே இன்று மேநாட்டின் விஞ்ஞான வல்லுனருரைக்குந்தத்துவமாம் என்றோர்க்குங்கால் என்னே! நந்தந்தையரின் நுண்ணறிவென்று வியப்புறுமலிருக்கமுடியுமா? The law of imposition என்று மேநாட்டுத் தத்துவஞானிகளின் சிகாமணிகள் ஒரு வறம்பை வகுத்து அவ்வாணையைச் சரிவர செலாவணி செய்விப்பவனொருவன் உளன் என வேற்றல் வேண்டும் என்று இன்றன்றோ வலியுறுத்துகின்றனர். இது நமக்கு அனேகவாயிர

மாண்டுகளுக்கு முன்பே விளக்கப்பட்ட தத்துவமென்பது ஈசன், பதி எனுஞ் சொற்களாலேயே புலனுகிறது.

அசித்துப் பொருளாலான இவ்வுடல் சித்துப்பொருளான ஆன்மாவிற்குப் போர்வை போலமைந்துள்ளது. ஆன்மாவினுல் தரிக்கப்படுகிறது. அவ்வண்ணமே உயிரினிற்குயிராய் நிற்கும் பதியும்—ஆன்மாவைத் தனக்குப் போர்வையாய் ஏற்றுள்ளான். சித்தான்மாவைத் தனக்கு ஓரம்பரமாய் ஏற்றுள்ள நாதனைச் சிதம்பர நாதனென்றழைத்ததின் பொருளினிமை யீண்டு சுவைக்கக் கிடைக்கிறது. அசித்சித்துக்கள் இரண்டையுமே தனக்குச் சரீரமென்ற வகையிலேற்றுள்ளான் ஈசன் ஆகவே ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு சிறிய உலகமென்பது உண்மையேயாமன்றே. இதனுலேயே அண்டத்திலுள்ளதைப் பிண்டத்திற்காண்பீரென்ற சொல்லால் சுருக்கிச் சொல்லினர் போலும். இத்தத்துவத்தை

அரக்கொடு சேர்த்தி—9-2-1 *சிவஞானபோதம் பக்கம்* 33 *என்ற செய்யுள் விளக்குகிறது.*

ஆயினும், பாசம் போம் வரை மலங்கள் நீங்கும் வரையில் வேற்றுமை நீங்காது. பிறப்பும், சிங்நாள் வாழ்க்கையும் பின்பு இறப்பும் மாறி மாறி வந்துகொண்டிருக்கும். இவ்வண்ணம் உலகிலுள்ள எல்லாப் பொருளுமே, (உலகமே), தோன்றல், நிற்றல், மறைதல் என்னும் (முக்காலத்தும் நிலைத்திருத்தலென்னும் இயல் பற்றதாய்) இயல்புற்றதாயிருத்தலின், இவ்வுலகத்தைத் தருபவன் ஒருவன் (படைப்பவன்) வேண்டுமென்றுணரக் கிடக்கிறது. அவனே கர்த்தா; அவனே முதல்வன்; அவனே தலைவன்; அவனே யீறுமாகி நிற்பவன். அவனுணையாலுலகந்தோன்றலும், நிற்றலு மழிவதுமாதலால் "அவனருள் வெளிக்குளே அகிலாண்டகோடி யெலாமடங்கவும், அவனே இவ்வண்டங்கள் பதினுன்கிற்கப்பாலு மிப்பாலும்" நிற்பவன் ஆவன். இக்கருத்தை

"ஒருவனே டொருத்தி ஒன்றென் றுரைத்திடு முலகமெல்லாம்
வருமுறை வந்து நின்று போவது மாதலாலே
தருபவனொருவன் வேண்டுந்தான் முதலீறுமாகி
மருவிடுமனுதி முத்த சித்திரு மன்னிநின்றே".

(21-1 சிவஞானபோதம் 391 பக்கம்.)

என்ற செய்யுள் விளக்குகிறது.

அவனே முன்சொன்னதுபோல் உலகெலாமுமாகிறான்—அவ்வுலகினின்றும் வேறுபட்டவனுமாகிறான்—தானே அனைவற்றிற்குந் தலைவனாய் நின்று—தன்னாணைக்குட்பட்டு உலகம் யாவும்—தமது கன்மானுசாரம் அமர்ந்து செல்லக்காரணமாகிறான். அமலனாகிய அவன் அழிவற்ற சீர்பெற்றவனேனும், மலங்களோடு கூடிய சேதனா சேதனப்பொருள்களுடன் நீங்காது எங்குமுளனாய் என்றுமுளனாய் நிற்கிறான் இத்தத்துவத்தை "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்ததெது..........அது

"உலகெலாமாகி வேறாயுடனுமாய் ஒளியாயோங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாயிவற்றின் தன்மை தனக்கெய்த லின்றித்தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காதெங்கும்".

(91-2 சித். சுபக்கம். பக்கம் 440)

என்ற செய்யுளால் விளக்கியுள்ளதைக் காண்க.

இதையே—சரீரத்திற்கும் ஆன்மாவிற்குமுள்ள சம்பந்தத்தைப் போல்—ஆன்மாவிற்கும் ஈசனுக்குங்கூட சரீரசரீரிபாவமே உண்டென்றும், ஆயினும் சரீரம் ஆன்மாவாகாது என்பதுபோல் ஆன்மா ஈசனாகமாட்டான் என்றும், ஆன்மாவினால் தரிக்கப்பட்டாலன்றி சரீரம் நிலைக்கப்பெறாது என்றதுபோல், ஈசனால் தரிக்கப்பட்டாலன்றி (அந்தர்யாமியால்) ஆன்மாவும் நிலைக்காது என்ற தத்துவம்

"உருவொடு கருவியெல்லாம் உயிர்கொடு நின்று வேறாய்
வருவதுபோல ஈசன் உயிர்களின் மருவி வாழ்வன்
தருமுயிரவனை யாகா உயிரவை தானுமாகான்
வருபவமிவைதானாயும் வேறுமாய் மன்னி நின்றே".

என்ற செய்யுளால் விளக்கப்பட்டிருக்கிறது.

இம்மட்டோடு பதியின் விளக்கத்தை நிறுத்துவோம். விளக்கிச் சொல்லவியலாதது பதியின் தத்துவம். அது 'வாக்கு அன்றி மனத்தினிற்கும் எட்டாத' எல்லையற்ற பெருமை வாய்ந்தது. இப் பதியின் தத்துவத்தை ஒருவாறு விளக்க முயற்சிக்கும் சமயகோடிகளெலாமிதைத் தாந்தாங் கண்டவாறுணர்த்தித் தந்தெய்வமெந் தெய்வமென்று பெரு வழக்கிடலாயின. விரிவான ஏனைய விளக்கங்களுக்கு நூல்களைக்காண்க.

இனி பசுவென்னுந் (ஆன்மாவின்) தத்துவத்தை யாராய்வாம். இதற்கு உயிர், சேதனன், சீவன், சீவான்மாவென்று நாமங்களுள. பசுவிலக்கணத்தைப் படிக்கும் முன்பு, பசுவென்னும் பொருளொன்றுண்டோ வென்னும் நைரான்ம வாதிகளின் மருளையும் இருளையும் போக்க நூலாசிரியரு முரையாசிரியரும் பொழிந்துள்ள தேன் மொழிகளின் தித்திப்பைச் சுவைத்தலவசியம். சைவசமய நூற்கட் பதினான்கில் ஒரோன்றும் பதினான்கு புவனங்களின் மதிப்பினுமுயர்ந்தவையாகும். சிவ ஞான போதமோ ஏனைய நூற்களின் கூட்டு விலையினுமேறிய சீருற்றதாகும். நூலைத் தொகுத்துள்ள நுட்பத்தைப் போற்றி முடியாது. இவ்விஷத்தை ஆங்கில மொழியிலாக்கிய "மதுசர்க்கரா" வென்னுந்தொகுப்பில் **(50-60)** சிறிது விளக்கியுள்ளேன். சைவாக மத்தைத்தழுவி மெய்கண்டார் அருளிய சிவஞான போதமென்னும் சூத்திரமும், அதற்கன்னாரே அருளிய வார்த்திகமும் அவற்றைத்தழுவிய சிவ ஞான சித்தியாரருளியுள்ள அவையடக்க முறையில் சிற்றுரை யென்றழைக்கப்பட்ட பேருரையும் முற்றும் வைதிக முறையை யொட்டியவை. இவர் 'சுபக்கத்தில்' நிரீசுரவாதிகளைக் கண்டித்து ஈசனுளன் எனச் சாதித்திருக்கும் வன்மையும், பரபக்கத்தினரை வரவேற்கும் நேர்மையும் நம் முன்னோரின் பண்பை விளக்குகின்றன.

அவவண்ணமே, நைரான்மவாதிகளின் போக்கையும் கண்டித்து ஆன்மாவென்னும் உயிர்ப்பொருள்—பசுவென்றழைக்கப்படும் தத்துவமொன்றுண்டு என்றும் கல்லின்மேல் வெட்டெனச் சமைத்துள்ளாம்.

"உயிரெனப்படுவதிந்த உடலின்வே றுளதாயுற்றுச்
செயிருறும் இச்சா ஞானச் செய்திகளுடையதாகிப்
பயில்வுறு மின்பதுன்பங்களும் நுகரும் பார்க்கில்
துயிலொடும் அஞ்சவத்தைப்படும் உண்மை துரியாதீதம்"

(187–3 *சித்தி—சுபக்கம்—பக்கம்* 490)

என்னுஞ் செய்யுளால் 'தருமிக்ராஹகமானம்' *என்னுமளவையால்*

தருமம் = இயல்பு; தருமி = இயல்பையுடையது;
மானம் = அளவு; மேயம் = அளவையாலளந்தறியப்படுவது.

தருமிக்ராஹகமானமாவது:—ஓரியல்பைக்கண்டு அதின் வாயிலாய் அவ்வியல்பையுடையது ஒன்றிருத்தல் வேண்டுமென்றறிதற்குற்ற முறையே தருமிக்ராஹகமான மெனப்படும்.

ஆன்மாவுண்டு எனச் சாதித்து அடுத்த **12** பாக்களால் 'ஆன்மா இல்லை' என்னும் பல்வேறு கக்ஷிகளின் கூட்டமான நைரான்மவாதத்தைக் கண்டித்துள்ளார். இவ்விவரங்களை நூலின் வாயிலாகக் கற்றலே நலம். ஆயினும் சுருக்கிச் சொல்லப்புகின் அவை பின்வருமாறு.

1. சூன்யவாதம் :— இது புத்த மதத்தினரின் கோள்கை. 'ஸர்வம் சூன்யம்' என்பது இவர் துணிவு. அதாவது யாவும் இன்மையே எனப் பொருள்படும். இங்கு யாவும் என்பது எதைக் குறிக்கும்? இன்மையென்பதுண்மையாயின் யாவும் என்ற சொல்லால் குறிப்பிடப்படுபவை யாவை? இல்லாத பொருள்களுக்கு வழக்குண்டானதெங்ஙனம்? யாவுமே சூன்யமாயின் அறிவும் இல்லையென்றன்றோ பொருள்படும். அறிவும் இல்லையேல் சூன்யம் என்ற தத்துவத்தையுணர்வதெங்ஙனம்? அவ்வாறின்றி, ஸர்வம் (யாவும்) என்ற சொல்லிற்கு ஞானம் (அறிவு) நீங்கியவை எனப் பொருள் கோள்கவென்பாரேல், ஸர்வம் (யாவும்) என்ற சொல்லிற்கு இவர்கள் கற்பிக்கும் பொருள் பாஷைக்கே புதுமையானதாகும். அப்பொருளையும் ஒருக்கால் ஏற்போமாயின் அறிவுமட்டுமுளது. மற்றவை யாவுமிலது என்பது இவர் சித்தாந்தமாகும் அறிவினுல் அறியப்படுபவை யொன்றுமேயில்லையேல் அறிவுமாத்திர முண்டென் பதை யறிதலெங்ஙனஞ் சாத்தியமாகும்? என்றிவ்வாறெல்லாம் வாதங்களும் பிரதிவாதங்களுமுண்டு. அவற்றையெல்லாம் ஒருபுறம் விடுத்து ஆன்மாவென்னுஞ் சொல் பாஷையிலிருப்பதாலும் அச் சொல்லைக் கேட்குங்கால் ஏதோ ஒரு பொருளைப்பற்றிய அறிவு உண்டாதலாலும்—இல்லாததற்கோரு பெயரும் பொருளும் உண்டாகாதாதலாலும் ஆன்மாவென்னும் உயிர்ப்பொருள் உண்டு என்று சாதிக்கப்படுகிறது.

2. தேகான்மவாதம் :—இச்சரீரமே ஆன்மாவெனப்படுவேது என்று ஒரு சிலர். தேஹமே ஆன்மாவாயின் 'யான்' 'எனது' என்பன போன்ற அகம்பாவத்தைத் தோக்கிய பொருள்படுஞ் சொற்களால் யாது பயன்? 'என் காலை' என்னும் வாக்கியத்தில் 'என் கால்' என்பதிலுள்ளதுபோல் என் என்ற சொல்லிற்குத் 'தனது சரீரத்துடன் சேர்ந்த' என்ற பொருள் ஒட்டாதே! என் காலை என்றவிடத்து என் என்ற சொல் சரீரத்திற்குப் புறம்பான 'நான்' என்னுமோரு பொருளைக் குறிப்பது மறுக்க முடியாத

உண்மை. ஆன்மாவென்பது இதுவே. இது சரீரமன்று. சரீரத்திற்குப் புறம்பானதும் ஆயினுஞ் சரீரத்தோடு ஒத்தியங்குவதுமான ஒரு தனிப்பொருளேன்பது உண்மை. இதனால் தேகான்மவாதம் தவிர்க்கப்பட்டது.

3. **இந்திரியான்மவாதம் :—** ஞானேந்திரியங்களாகிற மெய் வாய், கண், மூக்குச் செவிகளின் கூட்டத்திற்கே ஆன்மாவென்னும் இனப்பெயர் என்று ஒருசிலர். இதுவுஞ் சரியல்ல. இவ்விந்திரியங்கள் ஒவ்வொன்றுந் தற்றமது விஷயத்தை மட்டுமே கிரிஹிக்க உதவியாகுங் கருவிகளாம். பரிசம், சுவை, நிறம், மணம், சத்தம் என்பவையே இவற்றின் விஷயங்களாகும். இவ்விந்திரியங்களினுதவியால் மேற்சொன்ன விஷயங்களின் ஞானமேற்படுவதுண்மை மற்றும் இச்சை கிரியை போன்ற வேறு சில தர்மங்களும் உண்டென்பதை மறுக்கமுடியாது. இவை முன்சொன்ன இந்திரியங்களாற் சாதிக்கக்கூடியவையல்ல. மிகைப்படுமித் தருமங்களுக் குறைவிடமான தருமியொருவனிருத்தல் வேண்டுமென்னுமுடிவை மறுக்கமுடியாது. அத்தருமியே ஆன்மாவாகுமென்று இந்திரியான்ம வாதம் மறுக்கப்படுகிறது.

4 **இலிங்கசரீரான்மவாதம் :—** இறந்த பின் பிறப்புற ஆன்மாவிற்குக் கதிஸாதனமாயுள்ள இலிங்க சரீரமே ஆன்மாவாகும்.* (இவ்விலிங்க சரீரத்திற்குச் சூக்கும சரீரமென்றும் பெயர்.) என்பது வேறு சிலரபிப்பிராயம். இதுவுஞ் சேரியல்ல. தூல சரீரத்தின் இந்திரியங்களாலறியப்படும் விஷயங்கள் சூக்கும சரீரத்திற்குப் புலப்படா. அவ்வண்ணமாயின் உறங்கினவர்தாம் கண்டதோர் கனுப்பொருளை யுணர்ந்தபின்னேதுங்காலை—உணர்ந்த பின்புந்தொடர்ந்து அக்கனுவினைக் காணுகின்றானெனத் தகுமா? அன்றி உணர்ந்தபின் அக்கனவு மாறுவதால், கனுவினைக்கண்ட ஆன்மா உணர்ந்தவனின் தேகத்தினின்றும் பறந்துபோயிற்றெனத் தகுமா? அல்லது கனுவினைக்கண்ட சூக்கும சரீரம் உணர்ந்தவனின் சரீரத்தைவிட்டு வெளியேறிற்றென்றுதான் சொல்லத்தகுமா? உறங்குங்காற் கண்ட கனுப்பொருள் உணர்ந்தபின்னும் உணர்ந்த நேரத்தைய அனுபவங்கள் கனுவிலும் பின்னிக் கிடைப்பதால்... சூக்கும சரீரத்திற்குந் தூல சரீரத்திற்குமுள்ள பிணைப்பு புலனாகிறது. தூல சரீரத்தை ஜாக்கிரதையில் பயன்படுத்திக்கொள்வதுபோலவே சூக்கும சரீரத்தை சொப்பனத்தில் பயன்படுத்தி ஆன்மாவென்னுந்

தனித்த்துவப் பொருள்—இவ்விரு சரீரங்களையுமே பொதுவாக தனக்குப் போர்வையென ஏற்றுள்ளது. உட்சட்டை மேற்சட்டை களை நாமணிவதுபோல் ஆன்மா சூக்கும தூல சரீரங்களை அணிந் துளது. ஆகவே ஆன்மாவென்பது—தூல சரீரத்தினின்றும் வேறு பட்டது போலவே சூக்கும (இலிங்க) சரீரத்தினின்றும் வேறுபட்ட தாகும் என்ற சமாதானத்தினால் இச்சார்பாரையும் தவிர்த்துள்ளார்.

5. பிராணான்மவாதம் :—நாம் சுவாசிக்கும் (உட்கொள்ளும்) வாயுவிற்குப் (பிராணவாயுவிற்குப்) பிராணன் என்றும் பெயர். ஆன்மாவிற்கும் பிராணன் என்றோர் பெயருண்டாதலின்—இவ் வாயுவே—ஆன்மாவென்பர் சிலர். இதுவுஞ் சரியல்ல. பிராணன் அபானன், வியானன், உதானன், ஸமானன் என்னும் ஐவகை வாயுக்களும் அதனதன் செயற்கை (கருமத்தை) யை யோட்டி வேறுபடுத்தி வழங்கப்படுபவையானதால் இவை யாவுமாய் ஒன்றாகி தம்முள் முக்கியமான பிராணன் என்னும் வாயுவின் பெயரால் அழைக்கப்படுவதில் குற்றமில்லையாதலின்—இச்சை கிரியைகளுங் கூட ஒருவிதத்தில் இவ்வாயுக்களின் செயற்கை (கருமங்களின்) யினுட்படுமாதலின் இவ்வாயுவே ஆன்மாவென்பது இப்பாலரின் கொள்கை.

அங்ஙனமாயின் சுகம், துக்கம், இரக்கம், அன்பு, கனிவு, ஆர்வம் முதலிய உணர்ச்சிகள் இவ்வைவகை வாயுக்களின் கருமங் களுக்குப் புறம்பானதன்றோ? இவ்வுணர்ச்சிகட்குறைவிடம் யாது? பிராணன் என்ற சொல் சிலசமயங்களில் ஆன்மாவைப் பொருட் படுத்தும் வகையில் வழங்கப்படுவதாலேயே பிராணவாயுவே ஆன்மா வெனத் துணிதற்றகாது. பிராணன் என்னும் சுவாச நட்பு, ஆன்மா சரீரத்திலிருக்கிறான் என்பதைக் காட்டுமிலக்கணமாகும். வாயுவை போல் ஆன்மாவிற்குப் பிரிவுகளில்லை. கற்றும் வாயுவைப்போ லன்றி ஆன்மா ஞான இச்சா கிரியை என்னுஞ் சக்திகளோடு கூடியதுமாகையால்—பிராணவாயுவே ஆன்மாவென்னுந் துணிபும் ஏற்கத்தக்கதல்ல.

6. பிரம்மாத்மவாதம் :— சிலர் பிரம்மமே ஆன்மாவென்பர். இந்திரியங்களின் உதவியின்றியே சகலத்தையு மறியவுஞ் செய்யவுஞ் சமர்த்தானது பிரம்மம். "நோக்கு இன்றி கண்டும்............" முதலிய மேற்கோள்களிதற்குச் சான்று. ஆன்மாவோவென்னில் பஞ்ச பூதங்களாலான, பஞ்சகோசமய சரீரத்தின் (இந்திரியங்க ளுட்பட) உதவியின்றி நிலவி தன் ஞான இச்சா கிரியா சக்திகளை யுபயோகிக்கமாட்டாதது.

"புருடனே யறிவானுகிற் பொறிபுல னுதிபேதம்
தருவதென்..............." என்ற [221—4—பக்கம் 509]

செய்புளால் ஆன்மா அரசன்போல் நின்று தனுகரணுதிகளை யமைச்சர்போல் ஏற்று நிலவுகிறுன். மாயையின் விளைவான இத் தனுகரணுதிகளை பிரமம் ஏற்கவேண்டியதில்லை என வகுத்து—ஆன்மா பிரம்மத்தினின்றும் வேறுபட்டது கன்பத்திளுலுண்டான மலங்களோடு கூடியிருப்பதால் மாயையிற் சிக்குண்டு கிடப்பது என்பதை வலியுறுத்துகிறுர்.

7. ஸமுச்சயான்மவாதம் :— சுக்கிர சோணிதங்கள் பஞ்ச பூதங்கள், பஞ்ச யோகங்கள் மற்றும் இந்திரியங்கள் பஞ்சவாயுக்கள் என்னுமிவற்றின் கூட்டமே (ஸமுச்சயமே) ஆன்மாவேனப்படுவது என்பர் மற்றுஞ் சிலர். இதுவுஞ் சரியல்ல. யோக சாதனத்திஞல் துரியம் துரியாதீதமென்னும் நிலைகளையேகி—ஆங்கேற்படும் தனிச் சிறப்பான அனுபவங்களை ஆன்மாவன்றி வேறென்றினுலும் அறியவோ அனுபவிக்கவோ முடியாதாதலின்—ஆன்மாவென்னுந் தனித்தத்துவம்—மேற்சொன்ன கூட்டத்தினின்றும் வேறுபட்டிருக் கிறது என்று சுபக்கத்தை நிலை நிறுத்தியுள்ளார். இவ்விதம் ஆன்மாவுண்டு என்று வகுத்து அடுத்த **5** செய்யுட்களால் **210–214—of 4**-இவவான்மாவின் சொரூபவிலக்கணத்தை விவரித் திருக்கிறுர்.

அசித்தரு வியாபகம்போல் வியாபகம் அருவமின்றுய்
வசித்திடவரும் வியாபியெனும் வழக்குடையனுகி
நசித்திடா ஞானச் செய்தி அனுதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடையனுகிப் பசுவென நிற்குமான்மா.... **210**

மாயையின் வயிற்றுள் மன்னி வருஞ்செயல் ஞானமிச்சை
ஏயுமக்கலாதி மூன்றுல் ஏகதேசத்தி னேய்ந்திங்(கு)
ஆயுமுக்குணங்கள் அந்தக்கரணங்க ளாதியெல்லாம்
காய பெத்தங்களாகிக் கலந்துடன் நிற்குமான்மா...... **211**

சூக்குமதேகியாகித் தூலரூபத்தின் மன்னிச்
சாக்கிர முதலாயுள்ள அவத்தையுள் தங்கியெங்கும்
போக்கொடு வரவுமெல்லாம் புரிந்து புண்ணியங்கள் பாவம்
ஆக்கியும் பலன்களெல்லாம் அருந்தியும் நிற்குமான்மா. **212**

மருவானந்தம் விஞ்ஞான மனோபிராணன் அன்னமயம்
உருவாந்தன்மை யுண்டாய் முன் ஒன்றுக்கொன்று சூக்குமமாய்
வருமாம் அன்னமயம் பற்றி மாயை முதற்காரணமாகும்
அருவாயான்மா ஐங்கோசத்தார்புண்டவற்றின் அகம்புறமாம் 213

தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவைஇயக்கமும் சீர்த்
தேற்பாரிற் செலவும் வேருய்ச் செலுத்துவோர் செய்திதானும்
பார்ப்பாய வேடங்கட்டி ஆடுவோர் பரிசுபோலும்
ஆர்ப்பாய காயந்தன்னை ஆன்மா நின்றுாட்டுமாறே... 214

பின்னர் **215—220 of 4** என்ற ஆறு பாக்களால் ஆன்மா வைப்பற்றிய ஐயந்திரிபுகளைக் களைகிறுர். ஆன்மாவல்லாததை ஆன்மாவென்று கொள்ளல் தகாதன்றே? வடநூலாசிரியர்கள் இதை அங்யதாக்யாதி என்பர். இதைத் தவிர்த்தலும் அவசியமே.

இவ்விதம் ஆன்மா உண்டு—ஆன்மாவல்லாததை ஆன்மா வென்றேற்றற்றகாது என்றுங் கூறி யான்மாவின் இலக்கணங்களை யும் வகுத்துள்ள மாபெருமுபகாரத்திற்கு யாமீட்டவல்ல கைம்மாறு முண்டோ? இவ்வான்மா—பசு—சேதனனெனப்படும் உயிர்ப் பொருள்—ஞானசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்திகளைப் பெற்றதாய் ஸுக, துக்கா, இச்சா, த்வேஷ, ப்ரயத்ன தர்மாதர்மங்களுக் குறைவிடமாய், தன் கன்மத்தின் மலத்தால் பூசப்பட்ட மாசுடன் கூடியதாயும் அதனுலேயே தன்னைத்தானறியமாட்டாததாயும், கன்மத்தின் விளைவாய்ச் சுக துக்காதிகளைப் பெற வருவதும் போவது மான இயல்புடையுதாயும், அக்கன்மத்திற்கேற்றதாய சுகதுக்கங்களை யனுபவித்தற்கனுகுணமான பல்வேறு தனுக்களை மாயையினுற் பெற்று

புருடனே யறிவனுகிற் பொறி புலனுதிபேதம்
கருவதென் அறிவுமாயா தனுகரணுதிபற்றி
வருவதிங்கனுதியாக மலத்தினின் மறைந்து நிற்பன்
அருவனுய் இவற்ரூடாலும் அமைச்சரும் அரசும் போல்வன்
(221—4 *சிவஞானபோதம்*)

ஒவவொரு தனுவிற்கு மோன்ருேன்றென, அத்தனுவினுட்கிடந்து தான் ஓரரசனெனத் தனது தனுகரணுதிகளைத் தனதமைச்சரு மெனப் பெற்றதாய் உழங்குந் தனிப்பொருள். மலங்களைப்போக்கிக்

கொண்டால் தன் சொருபத்தைத் தானறியவல்லதாகும். முன் சொன்ன சரியை கிரியை ஆசானுபதேசம் முதலிய உபாயங்களால் மாயையை நீக்கிப்பிறவிக்கடலைத்தாண்டி இறைவனுடன் இயங்கும் இயல்பையும் பெற்றது. இதுவே பசுவின் தத்துவம். விரிவான விளக்கங்கட்குச் சித்தியாரின் **3–4** சூத்திரங்களின் உரையைக் காண்க.

இனி பாசமென்பதைப் படிப்போம்.

பாசமென்பதே மலம். இவை ஆன்மாவை மறைத்து-அதன் மேற்பூச்சென—தாம்பிரத்தின் மேலுறும் களிம்பும், இரும்பின் மேலுறும் துருவும் போலென நிற்பது. இது ஐவகைப்படும். ஆணவம், கன்மம், மாயா, மாயேயம், திரோதானசக்தி என்னு மிவையே ஆன்மாவை சிவப்பேறு பெறவொட்டாது தவிர்த்து பவப் பேற்றுடன் கட்டிவைக்கும் கயிறுபோன்றவை. இவை யாவும் இதுவரையிலுமே ஒருவாறு ஆங்காங்கு விளக்கப்பட்டுள்ளன.

மஹா பிரளய காலத்தில் மஹா சம்மாரமூர்த்தியான ஈசனில் சகல சட அசடப் பொருள்களுஞ் சென்றடங்குமென்பதும், அதனுல் அச்சம்மார மூர்த்தியே தன் வசமுள்ளவற்றைக்கொண்டு திரும்பவும் உலகைத் தோற்றுவிக்கிருன் என்பதும் முன்பே விவரிக்கப்பட்ட தாகும்.

அவ்வீசனுள்ளடங்கு மான்மாக்கள் தமது வினைப்பயனுலுற்ற மலங்களைக் களிம்புபோல் மேற்பூச்சாகப் பெற்றே இருக்கும். ஆதாரமொன்றுமின்றி ஆன்மா நிலையுருதானதாலிதற்குக் கதிஸாதன மெனப்படும் சூக்கும சரீரமும் இவ்வவத்தையிலுண்டு. இச்சூக்கும சரீரத்தில், தூல சரீரத்திற்கு வேண்டிய மூலப்பொருள்கள் யாவும் சூக்குமமாய் வித்தினுட் கிடக்கும் விருட்சமேபோல் சேர்ந்துள்ளன. ப்ரளயகாலத்திற்கு முன்தான் செய்த இத அதித கன்மங்களை யொட்டியே—மேற்சொன்ன களிம்புபோன்ற மலப்பூச்சுடன்கூடிய ஆன்மா—சிருட்டி காலத்தில் அக்கன்ம கலங்களுக்கேற்ப பலனைம பெற, அணுகுணமானவோர் சரீரத்தைப் பெறுகிருன். கன்ம பலனை யனுபவித்தற்கும், நல்வழிப்பட்டு சரியை கிரியைகளால் மலங்களைப் போக்கி ஆன்மா மோக்ஷம் பெறற்கும் உபாயமாகப் பிறவியை அளிக்கிருன் ஈசன்.

உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
உள்ளதாமுற் செய்வினை உள்ளடைவே—வள்ளலவன்
செய்தவர் செய்திப் பயன் விளைக்குஞ் சேய்யேபோற்
செய்வன் செயலணையா சென்று. (10–சூ. 2–அதி. 2–)

உள்ளதே தோற்ற உயிரணையும் என்ற **2**ஞ் சூ. — **2** அதிகாரணம் **10**ம் பாட்டினால் இவ்விஷயம் விளக்கப்படுகிறது.

அக்கன்மங்கட்கேற்ற பலனை யனுபவிக்காது தவிர்க்க முடியாது. அக்கன்மங்களுக்குற்ற பலனை யனுபவிக்கத் தோதான சரீரத்தையே ஒவ்வொரு ஆன்மாவிற்குமருளுவன் ஈசன்.

ஒவ்வொரு ஆன்மாவின் கன்மத்தையும் அதனாலவ்வான்மா பெறக்கிடக்கும் பிறப்பின் வகையையும் நன்கறியும் வல்லமையுள்ளவனீசன். அவனிடம் படைப்பிற்கவசியமான ஏனைய உபகரணங்களுமுண்டு. ஆகவே ஈசன் தானே கர்த்தனாய் நின்று மாயையைத் துணைக்காரணமாய் ஏற்று உலகைப்படைத்து, யோக பவங்களைத் தோற்றுவித்து உயிர்களுக்கு உடலையுமளித்து மற்றும் பவத்திற் புகுத்தித் தமது இதர கன்மங்களால் சிவப்பேற்றைப் பெற முயலுமாறு ஒரு வசதியை யளிக்கிறான். சித்தியாரின் சுபக்கத்தில் **2**-ஞ் சூத். கீழ் **91** ல் (பக்கம் **440**) குறிப்பிட்ட செய்யுளை இதற்கு மேற்கோளாக ஏற்கனவே காட்டப்பட்டது.

உலகெலாமாகி வேறாயுடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காதெங்கும்.

[91–2 *சித் சுபக்கம்* page 440]

இங்கு ‘தலைவனாய்’ என்ற சொல்லால் உலகத்திற்கு அவனே கத்தன்—நிமித்தகாரணம்—முதற்காரணமாவன் என்பதும்

உலகெலாமாகி நின்றனன் என்பதாலும்
உலகெலாமாகி உடனுமாய் நின்றனன் என்பதாலும்
உலகெலாமாகி யுடனுமாய் எங்கும் நீங்காது நின்றனன் என்பதாலும்

நிமித்தகாரணம் (முதற்காரணம்) என்னுமீசனே உபாதானகாரண (ஸமவாயிகாரண) முமாவன் என்பது விளக்குகிறது. ஆகவே உலகத்தைப் படைக்குங் கத்தனாகிய ஈசன் உலகத்திற்கு நிமித்தோபாதான காரணமுமாவன்.

நூலின் சேர்க்கை (தந்து ஸம்யோகம்) என்னும் அஸமவாயிகாரணம் படமென்னும் காரியத்தை யுண்டாக்குவதன்றே? இங்கு காரிய காரணங்களுக்குள்ள சம்பந்தத்தையன்றே தாதான்மியம் என்பர். அவ்வண்ணமே மாயையும் மாயேயமும் உலகிற்கு அஸமவாயி காரணங்களன்றேவெனின்—ஆன்று என்பதிச் சித்தாந்தத்தின் கொள்கை. தந்து ஸம்யோகமென்பது காரணத்தின் ஓர் நிலை—அந்நிலை காரணத்தின் காரியாவத்தையிலிருப்பதேயன்றி—ஆங்கோர் அஸமவாயி காரணமென்னும் ஒரு புதிய பாகுபாட்டைப் புகுத்துவது வீண். அங்ஙனமாயின், நிமித்த காரணத்திற்கும் எதிரியல்புடைய அநிமித்த காரணமும் ஒன்றைப் புகுத்தலாமே. இவையெல்லாம் வீண் வாதங்களாகவே தவிர்க்கத்தக்கவை. அவ்வாறு நோக்கப் புகின் உலகந் தோன்றுதற்கு ஈசனின் அருளுமோர் காணமன்றே—அவ்வருளின் மீசுரவேச்சங்களால் இதில் பலதரமும் கற்பிக்கலா மன்றே—ஆகவே இவ் வீண் வாதங்களை விடுக்கவும். ஈசன் உலகிற்கு அபின்ன நிமித்தோபாதான காரணமாவன் என்னுந் தத்துவத்தை ஏற்கவும். அவன், உயிர்கள் கன்மத்தாணையின் அமர்ந்து செல்லுமாறு செய்விப்பவன் அவ்வண்ணமே அவற்றைச் செலுத்துபவனுமாவன் ஆயினும் தான் அமலனாய் நிற்பன். அவனை மலங்கள் பற்று; அவனுக்குப் பிறப்பிறப்பில்லை. ஆயினும் உயிர்களைக் கன்மத்தாணையிற் செலுத்த உலகெலாமுமாகி—அத்துடனுமாகி—உயிரினிற்குயிராய் நிற்பவன் என்னுஞ் சித்தாந்தத்தை மட்டும் ஏற்கவேண்டுமெனக் கிடைக்கிறது. உடலினைப் பெற்ற உயிர், உடலையும் இந்திரியங்களையும், இந்திரியார்த்தங்களையும் அறியவல்லது. ஆயினும் இவ்வுடலோ இந்திரியங்களோ இந்திரியார்த்தங்களோ அவ்வுயிரினை அறியமாட்டா. அவ்வாறே உயிரினிற்குயிராய் நிற்குமீசன், உயிரையும் அதனாலறியப்படுஞ் சகலத்தையு மறியவல்லவனவன். ஆயினுமிவையொன்று மவனை யறியமாட்டா. இக்கருத்தை

பொறிபுலன் கருவியெல்லாம் புருடனாலறிந்தான் மாவை
அறிதரா, அவையேபோல ஆன்மாக்களனைத்து மெங்கும்
செறிதரும் சிவன்றனாலே அறிந்திடுஞ் சிவனைக்காணு
அறிதருஞ் சிவனே எல்லாமறிந்து அறிவித்து நிற்பன்.

(231 சித் சுபக்கம் 5 சூ page 516)

என்ற பாட்டினால் புகட்டியுள்ளார்.

KALIA BROTHERS

(REGD.)

MUSK & INDIAN DRUG MERCHANTS,

JULLUNDUR CITY, PUNJAB.

For Pure Musk, Saffron, Shilajit, Gorochanam, Real Pearls, Vamsa lochan, Ashtavargam, Pachakarpuram, Gold & Silver Leaves, Athivisha & All kinds of Himalayan Herbs and Drugs.

Price list & Catalogue Free on application.

We were awarded a Gold Medal Certificate for

MUSK & SAFFRON

by 39th All India Ayurvedic Congress,

KOTTAKKAL, MALABAR.

கலியா பிரதர்ஸ்

(ரிஜிஸ்டர்டு)

கஸ்தூரி, இந்தியமருந்து சரக்கு வியாபாரிகள்,
ஜலந்தர்ஸிடி, பஞ்சாப். (இந்தியா)

சுத்தமான உயர்ந்த ரக கஸ்தூரி, குங்குமப்பூ, சிலாஜத், கோரோசனம், நல்முத்து, வம்சலோசனம் (மூங்கிலுப்பு), அஷ்டவர்கம், பச்சைக்கர்பூரம், தங்க வெள்ளி இலைகள், அதிவிடயம் மற்றும் நல்ல ஹிமாலய மருந்துச் சரக்குகள் எம்மிடம் கிடைக்கும்.

எங்கள் கஸ்தூரியும் குங்குமப்பூவும்

39-வது அகில இந்திய ஆயுர்வேத மஹாஸம்மேளனத்தில்

(கோட்டக்கல், மலபார்.)

தங்கமெடல் அத்தாக்ஷிப்பத்திரம் பெற்றவை.

கேட்லாக் விலை விபரத்திற்கு எழுதவும்.

KALIA BROS, *Musk Merchants,*
JULLUNDER CITY. (Punjab.)